வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 09.08.2025 சனிக்கிழமை இதழ் : 221 பக்கங்கள் : 12

# தமிழ் அரசுக் கட்சி விரும்பினால் அடுத்த வாரம் சந்திக்க தயார்!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 09

**வட, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் இணைந்து ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி கையெழுத்திடாத நிலையில், அவர்கள் விரும்பும் பட்சத்தில் எதிர்வரும் வாரம் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்குத் தயாராக இருப்பதாக தமிழரசுக் கட்சியிடம் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.**

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கும் இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கும் இடையில் கடந்த முதலாம் திகதி கொழும்பிலுள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற சந்திப்பின்போது தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளும், சிவில் அமைப்புக்களும் இணைந்து ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கவிருந்த (அனுப்பிவைக்கப்பட்டுவிட்டது) கடிதத்தில் தமிழரசுக்கட்சி கையெழுத்திடுவது குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

அதற்கமைய கடந்த 3 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த தமிழரசுக்கட்சியின் அரசியல் குழுக்கூட்டத்தின் போது மேற்படி கடிதத்தில் கையெழுத்திடுவது குறித்துத் தீர்மானிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அத்தோடு அன்றைய தினம் மாலை 5.00 மணிக்கு இரு தரப்பினரும் சந்திப்பதற்குத் தீர்மானித்திருந்ததாகவும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார்

11

# 16 வயது மாணவி ஒருவர் கிருமித்தொற்றால் மரணம்

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஓக. 09

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மாணவி ஒருவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார். அச்சுவேலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் தரம் 11 இல் கல்வி பயிலும் சந்திரானந்தன் வர்ணயா (வயது 16) என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவிக்கு காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் கடந்த மாதம் 5ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்ப்பித்தனர். வைத்தியசாலையில் சேர்ப்பித்து சில தினங்களில் குறித்த மாணவி மயக்க நிலையை அடைந்துள்ளார்.

தொடர்ச்சியாக மயக்க நிலையில் இருந்து வந்த நிலையில் நேற்று அதிகாலை பரிதாபமாக

11

# சபாநாயகருக்கு எதிராக ஜெனீவாவில் முறைப்பாடு

கொழும்பு, ஓக. 09

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாராளுமன்றத்தில் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு சபாநாயகரால் நியாயமான காலம் வழங்கப்படாமை உட்பட முக்கிய காரணிகளை சுட்டிக்காட்டி சுவிஸர்லாந்தின் ஜெனீவா நகரிலுள்ள பாராளுமன்ற குழுக்களுக்கிடையிலான ஒன்றியத்திடம் முறைப்பாடளிப்பதற்கு எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சிகளின் கட்சி தலைவர்கள் கூடிய போது சில விடயங்கள் தொடர்பில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அவற்றில் ஒன்று பிரதி பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா

11

# கத்தோலிக்க தேவாலயங்களில் ஒலிபெருக்கி பாவனைக்கு தடை

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓக. 09

கத்தோலிக்க தேவாலயங்களில் திருநாட்களின்போது வீதிகளில் ஒலிபெருக்கி பயன்படுத்துவதால், ஒலி சூழல் மாசு எனும் தீமையால் மாணவர்கள், நோயாளர்கள், வயோதிபர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். இச்செயற்பாடு எம் சமூகத்தின் பெரும்

11

# யாழில் கோர விபத்தில் இளைஞர் உயிரிழப்பு!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஓக. 09

யாழில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் அவருடன் சென்ற மற்றொரு இளைஞர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். ஆவரங்கால் மேற்கு, புத்தூர் பகுதியைச் சேர்ந்த பரிஷ்ணன் அஜய் (வயது 20) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

11

# புல்லுக்குளத்தில் சடலம் மீட்பு!

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓக. 09

யாழ்ப்பாண நகரப் பகுதியில் உள்ள புல்லுக் குளத்தில் சடலமொன்று நேற்று மாலை இனங்காணப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் திரு வள்ளுவர் பண்பாட்டு மையத்திற்கு அருகில் உள்ள குறித்த குளத்தில் சடலமொன்று மிதப்ப தாக பொலிஸாருக்கு தகவலளிக்கப்பட்டது.

உயிரிழந்தவர் பற்றியோ உயிரிழப்புக்கான காரணமோ தெரியவராத நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# யாழில் இருவருக்கு மலேரியா!

யாழ்ப்பாணம், ஓக. 09

யாழ்ப்பாண மாவட்டத்தில், மலேரியா நோயாளர்கள் இருவர் இனங்காணப்பட்டுள்ளதாகவும், ஆபிரிக்க மற்றும் தென் அமெரிக்க கண்டங்களுக்கு செல் லும் மக்கள், மலேரியா ஏற்படாத முறையில், பாதுகாப்பு நடவடிக்கைகளை

11

# புதைகுழிகள் தொடர்பில் 22ஆம் திகதி விசேட அமர்வு

கிளிநொச்சி, ஓக. 09

எதிர்வரும் 22 ஆம் திகதி இடம்பெறவுள்ள, விசேட நாடாளுமன்ற அமர்வில், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் நில அபகரிப்பு, மனிதப் புதைகுழிகள் தொடர்பான விடயங்கள் குறித்து பேசப்படவுள்ளதாகவும், மனிதப் புதைகுழிகளுக்கான சர்வதேச விசாரணை வலியுறுத்தவுள்ளதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று, கிளிநொச்சியில் ஊடக சந்திப்பை நடத்திய வேளை, இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

# பிரதமர் மோடி - ரணில் உடன்பட்டவற்றை தாமதமின்றி நடைமுறைப்படுத்துங்கள்!

## குகதாசன் எம்.பி வலியுறுத்து

கொழும்பு, ஓக. 09

பிரதமர் நரேந்திர மோடி மற்றும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடன்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்து வதற்கு அரசாங்கம் தாமதமனின்றி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குகதாசன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை சம்பந்தமாக உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்-

2023 ஆம் ஆண்டில் தனியாள் வருமானம் 3,800 அமெரிக்க டொலர்களாக காணப்பட்டதுடன் மனிதவள அபிவிருத்தி சுட்டி வளர்ச்சி இல்லாமல் இருந்தது. இதனால் வறுமை அண்ணளவாக 26 சதவீதமாகியதோடு நுகர்வுச் சுட்டி வீழ்ச்சி அடைந்தது.

நிதி உதவிகள் மற்றும் சீர்திருத்தங்கள் காரணமாக, 2024

11

# கொக்குத்தொடுவாயில் கடலுக்கு சென்ற இளைஞர் ஒருவர் வெட்டிப் படுகொலை!

## மோப்பநாயுடன் தீவிர விசாரணையில் பொலிஸார்



முல்லைத்தீவு, ஓக. 09

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் களப்பு கடலிற்கு தொழிலுக்கு சென்ற இளைஞன் இனந்தெரியாதோரால் கொலை செய்யப்பட்டு சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

கொக்குத்தொடுவாய் வடக்கைச் சேர்ந்த ஜெயராஜ் சுபராஜ் என்ற 21

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலய வளாகத்துக்குள் திருடர்கள் நடமாட்டம் அதிகம்!

## யாழ். பொலிஸார் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 09

நல்லூர் திருவிழாவில் நகைகளை களவாட இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் திருடர்கள் நல்லூர் ஆலயத்துக்கு வருகை தந்துள்ளமையால், ஆலயத்துக்கு செல்லும் பக்தர்கள் அவதானமாக செல்லுமாறு யாழ்ப்பாணப் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

ஆலயச் சூழலில் திருடர்களின் நடமாட்டம் காணப்படுவதால் ஆலயத்துக்கு தங்க நகைகளை அணிந்து வருவதைத் தவிர்க்குமாறும், அணிந்துள்ள தங்க நகைகளில் கவனம் செலுத்துமாறும் பொலிஸார் கோரியுள்ளனர்.

அத்துடன், பொலிஸ் சீருடை மற்றும் சிவில் உடைகளில் பொலிஸார் ஆலயச் சூழல்களில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும், அருகில் உள்ளவர்கள் தொடர்பில் சந்தேகங்கள் எழுந்தால், பொலிஸாருக்கு உடன் அறிவிக்குமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர்.

அதேவேளை, ஆலயச் சூழல்களில் கண்காணிப்பு கமெராக்கள் பொருத்தப்பட்டு, அனைவரும் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் கூறினர். (அ)

# டிப்பர் மற்றும் பாரவூர்திகளுக்கு நல்லூர் பிரதேச சபை கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஒக. 09

நல்லூர் பிரதேச சபை ஆளுகைக்கு உட்பட்ட ஆடியபாதம் வீதியில் டிப்பர் மற்றும் பாரவூர்திகள் பயணிக்க கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.மயூரன் விடுத்துள்ள அறிவித்தலில்-

வீதிப்போக்குவரத்து இலகுபடுத்தும் நோக்கோடு முன்பள்ளி சிறார்கள், பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள் பணிக்கு செல்லும் நேரங்கள் மற்றும் அண்மையில் ஏற்பட்ட வீதி விபத்துக்கள் ஆகியவற்றைக்க் கருத்திற் கொண்டு பின்வரும் விடயங்கள் நல்லூர் பிரதேச சபையின் சபைத் தீர்மானங்கள் ஆக்கப்பட்டுள்ளன.

அவ் வகையில் எதிர்வரும் 01ஆம் திகதி முதல் மண் ஏற்றிச் செல்லும் டிப்பர் வாகனங்கள் முற்பகல் 6 மணி தொடக்கம் பிற்பகல் 6 மணி வரை ஆடியபாதம் வீதியூடாக பயணிப்பதற்கு முற்றாக தடை விதிக்கப்பதோடு ஏனைய பாரவூர்திகள் முற்பகல் 7 மணி தொடக்கம் முற்பகல் 9 மணி வரையும் பிற்பகல் 12.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரையும் கல்வியங்காட்டுச் சந்தியிலிருந்து கொக்குவில் சந்தி வரையான ஆடியபாதம் வீதியூடாக பயணிப்பதற்கு தடைவிதித்து பொதுப்போக்குவரத்தை இலகுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயத்தை எதிர்வரும் 01ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பும் கண்காணிப்பும் வழங்குமாறு யாழ்ப்பாண சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கும், கோப்பாய் பொலிஸாருக்கும் கடிதம் மூலம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களின் பொதுப்போக்குவரத்தினை இலகுபடுத்தல் செயற்றிட்டம் முதற்கட்டமாக கல்வியங்காட்டுச் சந்தியிலிருந்து கொக்குவில் சந்தி வரையான ஆடியபாதம் வீதியில் செயற்படுத்தப்படுகின்றது. எதிர்வரும் காலங்களில் குறித்த செயற்றிட்டம் ஏனைய வீதிகளிலும் நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவித்தார். (அ)

# மன்னாரில் விழிப்புணர்வு நடைபயணம்!

மன்னார், ஒக. 09

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நிர்வகிக்கப்படுகின்ற இளைஞர் கழகங்களுக்கான 19 ஆவது தேசிய இளைஞர் சம்மேளனத் தெரிவு சர்வதேச இளைஞர் தினமான எதிர்வரும் 12ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் நாடு பூராகவும் விழிப்புணர்வு நடைபயணம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்திலும் நேற்று வெள்ளிகிழமை முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் பஸார் பகுதியில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமான குறித்த நடைபயணம் பிரதான வீதியூடாக சென்று மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்தை சென்றடைந்தது.

இதன்போது இளைஞர்கள் போதைப்பொருள் பாவனைக்கு எதிராகவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதமாகவும் பல பதாகைகள் ஏந்தி வீதி வழியாக தமது பேரணியை மேற்கொண்டனர்.



குறித்த விழிப்புணர்வு நடைபயணத்தில் மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவி பணிப்பாளர் பூலோக ராஜா, இளைஞர் சேவை அதிகாரிகள்,இளைஞர்கள், யுவதிகள் என பலர் கலந்து கொண்டனர். (அ)



# திஸ்ஸ விகாரைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்!

யாழ்ப்பாணம், ஒக. 09

வலிகாமம் வடக்கு, தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக தொடர் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதன் தொடர்ச்சியாக பௌர்ணமி தினமான நேற்றும் குறித்த போராட்டமானது முன்னெடுக்கப்பட்டது.


சட்டவிரோத முறையில் அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், மக்களுடன் இணைந்து தொடர்ச்சியாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், மாவீரர் போராளிகள் குடும்ப நல காப்பக தலைவர் தீபன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ-05)

# சிறுமியின் கையை பதம் பார்த்த குரங்கு!

யாழ்ப்பாணம், ஒக. 09

மானிப்பாய் பிரதேச சபையின் கீழுள்ள ஆனைக்கோட்டை, கூளாவாடியில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவில் வளர்க்கப்படும் குரங்கு அங்கு சென்ற சிறுமியின் கையை கீறிக் காயப்படுத்தியுள்ளது.



கடந்த புதன்கிழமை குறித்த பூங்காவுக்கு சிறுமி தனது பெற்றோருடன் விளையாடுவதற்காக சென்றுள்ளார். அங்கு கூட்டினில் அடைக்கப்பட்ட குரங்கை சிறுமி பார்வையிட்ட போது சிறுமியை தாக்கியுள்ளது.

சிறுமியை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்ற தந்தையிடம் குரங்குக்கு தடுப்பூசி போடப்பட்ட புத்தகத்தை பெற்று வருமாறு வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

தந்தை மானிப்பாய் பிரதேச சபைக்கு சென்று பூங்காவில் தனது பிள்ளைக்கு இடம்பெற்ற சம்பவத்தை கூறி குரங்குக்கு போடப்பட்ட தடுப்பூசி அட்டையை தருமாறு கேட்ட போது, இந்த வருடத்துக்கான தடுப்பூசி போடவில்லை என பதில் வழங்கப்பட்டுள்ளது.

சிறுவர்கள் அதிகம் சென்று வரும் குறித்த சிறுவர் பூங்காவில் வளர்க்கப்படும் குரங்குக்கு தடுப்பூசி போடப்படாமலும் பாதுகாப்பற்ற முறையில் வழங்கப்படுவது தொடர்பிலும் சிறுமியின் தந்தை குற்றச்சாட்டுக்களை முன்வைத்த நிலையில் மானிப்பாய் பிரதேச சபையின் பொறுப்பற்ற செயல் தொடர்பிலும் கண்டனத்தையும் வெளியிட்டார்

குறித்த விடயம் தொடர்பில் பிரதேச சபை செயலாளரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர், குரங்கு சுமார் 10 வருடங்களாக அங்கு காணப்படுவதாக தெரிவித்ததுடன் தடுப்பூசி போடப்படாமை உண்மை எனவும் தெரிவித்தார். (அ-05)



ஓம் தொலைக்காட்சி நடத்தி வருகின்ற சைவம் தழைத்தோங்க நிகழ்ச்சி நல்லூர் வீதியில் வடகிழக்கிலுள்ள நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்று வருகிறது.

10ஆம் நாள் நிகழ்வில் திருமதி வாசஸ்பதி ரஜீந்திரனின் சாரங்கன் இசைமன்ற மாணவி இறை வணக்கம் இசைத்தார். புலோலி அறிவகம் இலக்கிய மன்ற மானவி நடன ஆற்றுகை மேற்கொண்டார். மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியை கவிதா வாமதேவன், நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாலய ஆசிரியை சிவசக்தி ஜெயகாந்தன் ஆகியோரை நடுவராக கொண்டு செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் நடத்திவருகின்ற சைவக்களஞ்சியம் வினாடி வினா போட்டி சிறப்பு நிகழ்வாக இடம்பெற்றது. போட்டியில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் ஊக்குவிப்பு பரிசில்கள் வழங்கப்பட்டன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
09.08.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், ஆடி 24

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஈழத் தமிழர் உருப்பட வழியுண்டா?

ஈழத் தமிழர் அரசியல் ரீதியாக உருப்படுவதற்கான வழி பற்றியே இங்கு நோக்கப்படுகின்றது. ஏன் இவ்வறானதொரு கேள்வியை நாம் முன்வைக்கின்றோம்?

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக வசதியும் வாய்ப்பும் உள்ள ஈழத் தமிழர்களில் ஒரு பகுதியினர், மேற்குலக நாடுகளில் தஞ்சமடைவதற்கான வாய்ப்பு கிடைத்தது. இவ்வாறு மேற்கு நாடுகளில் தஞ்சமடைந்தவர்களின் ஒரு தலைமுறையே சட்டவிரோதமாக அந்த நாடுகளுக்குள் நுழைந்தவர்கள்தான். இலங்கையில் வாழ முடியாதளவிற்கு தங்களுக்கு நெருக்கடிகள் இருப்பதான காரணத்தைக் கூறி, அனுபதாபத்தின் அடிப்படையிலும் மனித நேயத்தின் அடிப்படையிலும் குறித்த நாடுகளின் நிரந்தரமாக வாழும் வாய்ப்பை பெற்றனர்.

இன்னொரு பகுதி 2009இல் யுத்தம் முடிவுற்றதன் பின்னர், அதனைக் காரணமாகக் காண்பித்து, மீண்டும் நாட்டுக்குச் செல்ல முடியாது என்னும் காரணத்தைக் கூறியே, குறித்த நாடுகளில் வாழும் வாய்ப்பை பெற்றிருக்கின்றனர். இப்போதும் உறவினர்களின் வழியாகவும், வேலை வாய்ப்புக்கான உத்தரவாதத்துடன் பலரும் சென்று கொண்டுதான் இருக்கின்றனர்.

இவ்வாறு மேற்கு நாடுகளில் தஞ்சமடைந்தவர்களில் பெரும்பான்மையான மக்கள் கனடாவில் வாழ்கின்றனர். இதன் காரணமாகத்தான் கனடாவில் ஒரு தமிழர் அமைச்சராக நியமிக்கப்படும் அரசியல் சூழல் கனிந்தது. உள்ளூர் வாக்கு வங்கியில் செல்வாக்குச் செலுத்தக் கூடிய நிலையில் இருப்பதன் காரணத்தினால்தான், அது சாத்தியப்பட்டது.

தாயக மக்களின் நலனின் பெயரால் பல விடயங்கள் கனடிய தமிழர்கள் மத்தியில் முன்னெடுக்கப்படுகின்றன. விடுதலைப் புலிகள் அமைப்பு இயங்கிய காலத்தில், விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்பட்ட ஆயுத நடவடிக்கையை தொய்வின்றி முன்னெடுப்பதற்கான ஒரு பின்தளமாகவே புலம்பெயர் சமூகம் பயன்படுத்தப்பட்டது. இந்த நிலையில் பல அமைப்புகள் அந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டன. நிதி சேகரிப்பதும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் விடுதலைப் புலிகளின் ஆதரவுத் தளத்தை பேணிப் பாதுகாப்பதும்தான் அவற்றின் பிரதான நோக்கமாகும்.

2009இல் விடுதலைப் புலிகளின் தலைமை இல்லாமல் போன பின்னர் மேற்குலக நாடுகளில் உருவாக்கப்பட்ட அமைப்புகள் ஒவ்வொன்றும் தங்களின் செயல்பாடுகளை சுயாதீனமானதாக்கிக் கொண்டனர். சில முன்னணி அமைப்புக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயல்பட்டன. இன்னொரு பகுதி இதனை எதிர்த்தது. இந்த நிலையில் இவ்வாறான அமைப்புகள் தங்களுக்குள் மோதிக் கொள்ளும் புதிய அரசியல் போக்கொன்று மெல்ல முகம் காட்டியது. தற்போது அந்த நிலைமை அருவருக்கத்தக்க நிலையில் மோசமடைந்திருக்கின்றது.

சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இரண்டு நிகழ்வுகளும் அதற்கு எதிராக செயல்பட்டவர்களின் நடவடிக்கைகளும் இதற்கான சிறந்த உதாரணமாகும். விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரின் இறப்பை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்ற நிகழ்வை குழப்பும் வகையில் பிறிதொரு குழு செயல்பட்டது. இதே போன்று, கனடாவில் இடம்பெற்ற கனடிய தமிழ் காங்கிரஸ் அமைப்பின் வருடாந்த நிகழ்வு ஒன்றை எதிர்த்து, பிறிதொரு தரப்பு, வீதிகளில் இறங்கி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டது.

மேற்குலக நாடுகளின் தலைநகரங்களின் வீதிகளில் நின்றவாறு, சொந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களை துரோகிகள், காட்டிக் கொடுப்பவர்கள் என்று சத்தமிடும் காட்சிகளை நோக்கும் போது ஈழத் தமிழ் சூழலை விடவும் அங்கு நிலைமை மோசமாக இருப்பதாகத் தெரிகின்றது. இவர்கள் எதற்காக இதனைச் செய்கின்றனர்? இதனால் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் அடையப் போகும் நன்மை என்ன? மேற்குல ஜனநாயகச் சூழலிலேயே சுதந்திரமான செயல்பாடுகள் குழப்பப்படுகின்றன என்றால் இது மிகவும் ஆபத்தானது. மாற்றுக் கருத்துகள் இருப்பது பிரச்னையில்லை. ஆனால், அது மற்றவர்களின் கருத்துகளுக்கான வாய்ப்பை மறுப்பதாக, செயல்பாடுகளை தடுப்பதாக இருக்கக் கூடாது. இதனை தமிழ் அரசியல் தரப்புகளும், புத்திஜீவிகளும் கண்டும் காணாமல் இருப்பது தவறானது. இவ்வாறான விடயங்களை நோக்கும் போதுதான், இந்த இனம் உருப்பட வழியிருக்கின்றதா என்னும் கேள்வி எழுகின்றது.

# கிளிநொச்சி றோட்டரக்ட் கழகத்தினால் முழங்காவில் ம.வி மாணவருக்கு பாதணி

கிளிநொச்சி, ஓக. 09

கிளிநொச்சி றோட்டரக்ட் கழகத்தினால், கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலய மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கப்பட்டன.

கரடு முரடான பயணங்களைத் தாண்டி கல்விக் கதிர் கொண்டு எதிர்காலத்தில் ஒளிரக் காத்திருக்கும் மாணவர்களின் பாதைகளை அழகாக்கும் நோக்கில் அவர்களின் தேவை கருதி குறித்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

"அகரம் வளர்" கற்றலின் உச்சம் கண்டிடவே எனும் தொனிப்பொருளுக்கு அமைய உதவித் திட்டம் வழங்கப்பட்டது.

குறித்த பாதணிகளுக்கான அனுசரணையை யோ. சதீஸ்குமார் வழங்கினார்.

குறித்த பாதணிகளை கிளிநொச்சி றோட்டரக்ட் கழக கழக வழிகாட்டி ஒருங்கிணைப்பாளர் பிரியந்தனா மற்றும் கழக தலைவர் தனுயன், முன்னாள் தலைவர் குருகுலன் ஆகியோர் வழங்கி வைத்தனர்.

குறித்த நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கழக உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

(அ)

# வவுனியா விபுலானந்தா மாணவிகள் சாதனை



வவுனியா, ஓக. 09

அகில இலங்கை முய்தாய் போட்டிகளில் தேசிய மட்டத்தில் வவுனியா விபுலானந்தா கல்லூரி மாணவிகள் இருவர் சாதனை படைத்து விருதினைப் பெற்றுள்ளதுடன், அபுதாபியில் நடைபெறவுள்ள உலக சம்பியன்சிப் போட்டியிலும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஜெசுவா ஜெசிதாஸ் 16 - 17 வயது பிரிவிலும், டர்சிகா தச்சணாமூர்த்தி 12 - 13 வயது பிரிவிலும் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற முய் தாய் போட்டிகளில் பங்குபற்றி சாதனை படைத்துள்ளனர். குறித்த மாணவிகளை கௌவிக்கும் நிகழ்வு பாடசாலயில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் ஞானமதி மோகனதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாணவிகள் பான்ட் வாத்திய அணி வகுப்புடன் வரழைக்கப்பட்டு அவர்களுக்கு மாலை அணிவித்து, பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

குறித்த மாணவிகள் எதிர்வரும் செம்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை அபுதாபியில் இடம்பெறும் மும் தாய் வேல்ட் சம்பியன் சிப் போட்டியில் இலங்கை சார்பாக பங்குபற்றவுள்ளனர் என பாடசாலை அதிபர் மோ. ஞானமதி தெரிவித்தார். (அ)

# மாகாண சபை முறைமையும் அதிகார பகிர்வும் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 09


மாகாண சபை முறைமையும் அதிகார பகிர்வும் என்னும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் ரில்கோ விடுதியில் நடைபெறவுள்ளது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் அதன் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் தலைமையில் இக் கருத்தரங்கு இடம்பெறும்.

இக் கருத்தரங்கில் மகாணசபைகளுக்கு பகிரப்பட்ட அதிகாரங்களும் வரையறை என்னும் தலைப்பில் இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளரும் கிழக்கு மாகாண முதலமைச்சர் சந்திரகாந்தனின் பிரதம ஆலோசகருமான கலாநிதி க.விக்கினேஸ்வரனும், மாகாண சபைகளுக்கு பகிரப்பட்ட நிதி அதிகாரங்களின் வீச்சும் எல்லையும் என்னும் தலைப்பில் முன்னாள் சிரேஷ்ட நிர்வாக அதிகாரியும் சமூக செயற்பாட்டாளருமான ம.செல்வினும், வடக்கு - கிழக்கு மகாணங்களில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சியை நிறுவுதலின் முக்கியத்துவம் என்னும் தலைப்பில் வடமாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சரான கலாநிதி க.சர்வேஸ்வரனும், மகாணசபை முறைமை ஈழத்தமிழரின் நியாயமான அபிலாசைகளுக்கான பயணத்தின் முதற்படிக்கல் என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி கோசலை மதனும் உரையாற்றுவார்கள்.

(அ-02)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு






**மேடம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். பழைய சிக்கலில் ஒன்று தீரும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே பட படப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். அதிகாரிகளை பகைத்துக் கொள்ளாதீர்கள். வளைந்து கொடுக்க

**மிதுனம்**
உற்சாகமாக எதையும் செய்ய தொடங்குவீர்கள். அழகும் இளமையும் கூடும். வாகனப் பழுதை சரி செய்வீர்கள். அதிகாரிகளுக்கு சில ஆலோசனைகள் தருவீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வளைந்து கொடுத்து செல்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உங்களின் புதிய முயற்சிகள் பாராட்டுவார்கள். வெற்றி கிட்டும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். நீண்ட நாள் பிரார்த் தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். உத்தியோகத்தில் அமைதி நிலவும். புதுமை படைக்கும் நாள்.

**கன்னி**
தடைகளைக் கண்டு தளரமாட்டீர்கள். வீடு வாகன பராமரிப்புச் செலவுகள் அதிகமாகும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும்.

**துலாம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உங்கள் கோரிக்கையை ஏற்பார். தைரியம் கூடும் நாள்.

**விருச்சிகம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். உறவினர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்ப தால் மனஇறுக்கங்கள் உருவாகும். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி இருக்கும். சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும்.

**மகரம்**
சில வேலைகளை அலைந்துதிரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப்பேசி வசூலிக்கப்பாருங்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளிடம் பிரச்னைகள் வரக்கூடும்.

**கும்பம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். ஆன்மிக பெரியோரின் ஆசி கிட்டும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். புதிய பொறுப்புகள் தேடி வரும்.

**மீனம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். சவால்களில் வெற்றி பெறும் நாள்.

# 500 போதை மாத்திரைகளுடன் சுன்னாகத்தில் இளைஞன் கைது


யாழ்ப்பாணம், ஓக. 09

யாழ். சுன்னாகம் பகுதியில் பெருமளவு போதை மாத்திரைகளை பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைப்பற்றினர்.

பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் சுன்னாகம் விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சுன்னாகம் நகர்ப்பகுதியில் போதை மாத்திரைகளை விற்பனைக்கு இளைஞன் ஒருவர் எடுத்து வருவதாக குறித்த பிரிவினருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைவாக சம்பவ இடத்துக்கு விரைந்த பிரிவினர் 500 போதை மாத்திரைகளை கைப்பற்றினர் .

தொடர்ந்து 25 வயது இளைஞன் ஒருவரை கைது செய்து குறித்த சந்தேக நபருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-03)



# வடமராட்சி கட்டைக்காட்டு பகுதியில் அதிகளவான பனைகள் எரிந்து நாசம்

யாழ்ப்பாணம், ஓக. 09

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டு பகுதியில் நூற்றுக்கணக்கான பனை மரங்களுக்கு விசமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை கட்டைக்காடு இராணுவ முகாமுக்கு முன்னால் உள்ள நூற்றுக்கணக்கான பனைகள் திடீரென தீப்பற்றி எரிந்தன.

இந்த நிலையில், இராணுவத்தினர் தீயை அணைப்பதற்காக தீயணைப்பு வாகனத்தை வரவழைத்ததுடன் மருதங்கேணி இராணுவ முகாமிலிருந்து தீயை அணைப்பதற்காக 200 இராணுவத்தினர் வந்தனர்.

தீ வேகமாக பரவிய நிலையில் பல மணி நேர போராட்டத்துக்குப் பின்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இதேவேளை, அதிகளவான பனை மரங்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

(எ-5)

# தெய்வீகத் திருக்கூட்டத்தொடர் நிகழ்வில் இசை அர்ப்பணம், சிறப்புச் சொற்பொழி

யாழ்ப்பாணம், ஓக. 09

நல்லூர் கந்தன் உற்சவகாலப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடரின் 12 ஆம் நாள் நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று சனிக்கிழமை மாலை 04.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இதில், யாழ். பல்கலைக்கழகச் சைவ சித்தாந்தத்துறைத் தலைவர், கலாநிதி பொன்னுத்துரை சந்திரசேகரம் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கலை நிகழ்வுகளை யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பிரிவின் அத்தியடி சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, செந்தில் கதிர் வேலாயுதசுவாமி அறநெறிப் பாடசாலை மற்றும் வெங்கடேசன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கவுள்ளனர்.

சிறப்பு நிகழ்வுகளாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள வளவாளர் நாக ராஜா சனாதனன் “சைவத்தமிழ் தமிழர்கள்” என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவும் நல்லூர், ஸ்கந்தபதி கலாமன்ற நிறுவுநர் மற்றும் இயக்குநர் கலா வித்தகர் திருமதி மா. அனந்த லட்சுமியும் அவர்தம் மாணவர்களும் வழங்கும் “இசை அர்ப்பணம்” நிகழ்வும் நடைபெறும். (எ)

# நல்லை ஆதீனத்தில் தெய்வீகக் கலை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக. 09

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் தினமும் காலை 10. 00 மணிக்கு “தெய்வீகக் கலை அர்ச்சனை” நிகழ்வு நடைபெறுகிறது. அந்த வகையில் இன்று சனிக்கிழமை மட்டுவில் ஓம் நமசிவாய குழுவினரின் பஜனை நிகழ்வும் சைவப்புலவர் செ. த. குமரனின் ஆன்மீகவுரையும் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (எ)

# சிவகுரு ஆதீனத்தில் உற்சவகால அருளுரை

யாழ்ப்பாணம், ஓக. 09

சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் நல்லூர் கந்தன் கொடியேற்றம் முதல் தீர்த்தோற்சவம் வரை தினமும் இரவு 08. 00 மணி முதல் 08. 30 மணி வரை சிவகுரு ஆதீன மண்டபத்தில் அருளுரை நடத்தப்படுகின்றது.

இன்று சனிக்கிழமை “அறியாமையால் கெடவோ”,

நாளை ஞாயிற்றுக்கிழமை “நீ தான் சற்றும் நினைந்திலையே”,

திங்கட்கிழமை “விதியின் பயன் இதுவோ”

செவ்வாய்க்கிழமை “அறியாமை பொறுத்திலையே” ஆகிய தலைப்புகளில் அருளுரை நடைபெறவுள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொழும்பில் துப்பாக்கிச்சூடு:

# இளைஞர் ஒருவர் உயிரிழப்பு; மூவரின் நிலை கவலைக்கிடம்



கொழும்பு, ஓக. 09

**கொழும்பில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். மேலும், நால்வர் காயமடைந்தனர். இவர்களில் மூவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.**

பொரளை - சகஸ்ரபுர பகுதியிலுள்ள மைதானம் ஒன்றில் 5 இளைஞர்களை இலக்கு வைத்தே இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதில் படுகாயமடைந்த ஐந்து இளைஞர்களும் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் உயிரிழந்தார். ஏனைய மூவருக்கு தீவிர சிகிச்சைப் பிரவில் சிகிச்சை அளிக்கப்படுகிறது என்று மருத்துவமனை பணிப்பாளர் தெரிவித்தார்.

உயிரிழந்தவர் கொழும்பு - களனியை சேர்ந்த 23 வயது இளைஞராவார். மேலும், கொழும்பு 9ஐ சேர்ந்த 21, 22, 23 வயது இளைஞர்களே காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ரி - 56 ரக துப்பாக்கி மூலம் தாக்குதல் நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இலங்கை சட்டத்தை கடைப்பிடியுங்கள்!

## நாட்டிலுள்ள சீனர்களுக்கு அந்நாட்டு தூதரகம் அறிவுரை

கொழும்பு, ஓக. 09

இலங்கையிலுள்ள சீன நாட்டவர்கள், உள்ளூர் சட்டங்களை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என்று இலங்கைக்கான அந்த நாட்டின் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

உள்ளூர் சட்டங்கள், விதிமுறைகளை மீறினர் என்று சந்தேகிக்கப்படும் சீன நாட்டவர்கள் இலங்கை அதிகாரிகளால் தடுத்து வைக்கப்படும் அல்லது விசாரணைக்கு உட்படுத்தப்படும் சம்பவங்கள் அண்மைக்காலங்களில் அதிகரித்துள்ளன. இந்தநிலையிலேயே, சீன தூதரகம் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளது.

இதன்படி, சீன நாட்டவர்களின் பிம்பம் பாதிக்காமல் இருப்பதற்கு, சீன சுற்றுலா பயணிகள் உள்ளூர் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் - என்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை சுற்றுலாத்துறை தற்போது வளர்ச்சியடைந்து வரும் நிலையில், இந்த ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் நாட்டுக்கு வருகைதந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 13 இலட்சத்தைக் கடந்துள்ளது.

இந்த காலப்பகுதியில், இந்தியாவிலிருந்து அதிகளவான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர். இந்தப் பட்டியலில் சீனா நான்காவது இடத்தில் உள்ளது. (ஐ)

# எரிபொருள் செலவாகமேலதிகமாக ரூ. 77 இலட்சத்தை பெற்ற முதல்வர்

கொழும்பு, ஓக. 09

காலப்பகுதியில் சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சருக்கு அனுமதிக்கப்பட்ட எரிபொருள் செலவுக்கும் மேலதிகமாக 77 இலட்சத்து 30 ஆயிரத்து 262 ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது என்று அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் (கோபா) தெரியவந்துள்ளது.

அரசாங்க கணக்குகள் பற்றிய குழு (கோபா குழு) அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்த செனரத் தலைமையில் அண்மையில் கூடிய போதே இந்த விடயம் வெளிப்பட்டது.

2014 - 2017ஆம் ஆண்டு காலப் பகுதிக்குள் அவருக்கு இந்தத் தொகை வழங்கப்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது. சப்ரகமுவ முன்னாள் முதலமைச்சர் பயன்படுத்திய 3 வாகனங்களுக்காக 1,700 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டது. இதற்காக 98 இலட்சத்து 50,170 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இது அனுமதிக்கப்பட்ட அளவிலும் மேலதிகமானதாகும்.

இந்த நிலையில் ஒரு மாத காலத்துக்குள் இது குறித்த விரிவான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும், வரையறையை மீறிப் பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தை மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அறிவுறுத்தல் வழங்கியது. (ஐ)

# பாதுகாப்பு பிரதியமைச்சர்மீது நம்பிக்கையில்லா பிரேரணை

## நாளை மறுதினம் கையளிக்க திட்டம்

கொழும்பு, ஓக. 09

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லா பிரேரணையை நாளை மறுதினம் திங்கட்கிழமை சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவிடம் கையளிக்கவுள்ளது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் பிரதி அமைச்சருக்கு எதிராக 15 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுகளில் பெரும்பாலானவை உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையவை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# II இந்தியர்களை நாடு கடத்துமாறு நீதிமன்று உத்தரவு

கொழும்பு, ஓக. 09

தலங்கம பகுதியில் திங்கட்கிழமை இரவு கைது செய்யப்பட்ட 11 இந்தியர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன், அவர்களை நாடு கடத்துமாறும் கொழும்பு - கடுவலை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வீசா மீறல் மற்றும் சட்டவிரோத சூதாட்டத்தில் ஈடுபட்ட இவர்களிடம் இருந்து 20 கைபேசிகள், மூன்று மடிக்கணினிகள் மற்றும் ஒரு ரப் வகை கணினி என்பன பறிமுதல் செய்யப்பட்டன.

# நம்பிக்கையில்லா பிரேரணை எளிதாக தோற்கடிக்கப்படும்

## தேசிய மக்கள் சக்தி

கொழும்பு, ஓக. 09.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அருண ஜெயசேகரவுக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டால் அரசாங்கம் அதனை எளிதில் தோற்கடித்துவிடும் என்று தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் நிபுணாராச்சி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு 159 மக்கள் பிரதிநிதிகள் உள்ளனர். எனவே அரசாங்கத்தால் நம்பிக்கையில்லா பிரேரணையை எளிதில் தோற்கடிக்க முடியும். மேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து சுயாதீன விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. அரசாங்கம் அதில் எந்த செல்வாக்கையும் செலுத்தவில்லை.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு அமைச்சர் அருண ஜயசேகரவும் ஆதரவு அளித்துள்ளார் - என்றும் கூறினார். (ஐ)

# உயர்தர பரீட்சைக்கான விண்ணப்ப இறுதித் திகதி நீடிக்கப்பட்டுள்ளது!

கொழும்பு ஓக. 09

2025ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதி திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் 12ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை இணையவழியில் மாணவர்கள் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

2024ஆம் ஆண்டு மீள் மதிப்பீட்டு பெறுபேறுகளின் அடிப்படையில் 2025 உயர்தர பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள், 2025 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு குறிப்பிட்ட காலத்தில் விண்ணப்பிக்க முடியாதவர்களுக்காக இந்த கால அவகாசம் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், இந்த சலுகை காலம் எந்தவொரு காரணத்தைக் கொண்டும் மேலும் நீடிக்கப்படாது என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)

# 100 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப்பொருள் சிக்கியது

## சந்தேகநபர்கள் இருவர் கைது

கொழும்பு, ஓக. 09

சுமார் 100 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பின் கொதட்டுவ, கடுவலை நகரப் பகுதிகளில் விசேட படையினர் முன்னெடுத்த சிறப்பு நடவடிக்கையிலேயே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 10 கிலோ மதிப்புள்ள குஷ் ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. இதன் சந்தைமதிப்பு சுமார் 100 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# அரச நிறுவன பயன்பாட்டுக்காக 2,000 கெப் வாகனங்கள் இறக்குமதி

கொழும்பு, ஓக. 09

அரச நிறுவனங்களில் நீண்டகாலமாக நிலவும் வாகன பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக 2 ஆயிரம் கெப் ரக வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

சில அரச துறைகளுக்குக் கிட்டத்தட்ட 15 ஆண்டுகளாக புதிய வாகனங்கள் கிடைக்கவில்லை. இதனால், அதிகாரிகள், குறிப்பாக களப் பணிகளில் ஈடுபடுபவர்கள் சிரமமடைகின்றனர் என்று அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

பொதுத்துறை நிறுவனங்கள் எதிர்கொள்ளும் தளபாட சவால்களை முழுமையாக மதிப்பாய்வு செய்த பின்னர், ஜனாதிபதியின் அறிவுறுத்தல்களை தொடர்ந்து வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான முடிவு எடுக்கப்பட்டது. இதன்போது, பிரதேச செயலகங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

# மனைவி கொலை; கணவன் கைது!

கொழும்பு, ஓக. 09

குடும்பத் தகராறு காரணமாக மனைவியை கூரிய ஆயுதத்தால் குத்திக் கொலை செய்த கணவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு பொலநறுவை - அரலகங்வில, தியபெதும பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில், 40 வயது பெண் ஒருவரே கொல்லப்பட்டார்.

பெண்ணின் கணவரான 48 வயது நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அரலகங்வில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திங்கள் முதல் மருத்துவர்கள் வேலைநிறுத்தப் போராட்டம்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

### * 135 மருத்துவமனைகள் மூடப்படும் அபாயம்

கொழும்பு, ஓக. 09

**சுகாதார அமைச்சின் சில உயர் அதிகாரிகளின் தீர்மானத்தால் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள சுமார் 135 மருத்துவமனைகள் மூடப்படும் அபாயம் உள்ளது. சுகாதார கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளுக்கு அமைச்சர் தகுந்த பதில் அளிக்காதுவிடின் நாளை மறுதினம் முதல் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் மருத்துவர் சமில் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மருத்துவர்கள், விசேட மருத்துவ நிபுணர்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும்பட்சத்தில் சுகாதார கட்டமைப்பில் நெருக்கடி ஏற்படும். எது எவ்வாறிருப்பினும் நாடளாவிய ரீதியில் 24 மணிநேரமும் தடையற்ற மருத்துவ சேவையை முன்னெடுக்க வேண்டியது அத்தியாவசியமானது.


நாட்டில் 23 ஆயிரம் சிரேஷ்ட மருத்துவர்கள் காணப்படுகின்றனர். வருடாந்தம் 2 ஆயிரம் மருத்துவர்கள் இந்தக் கட்டமைப்பில் இணைகின்றனர். எனவே, இவர்களுக்கான நியமனங்களை முறையாக வழங்க வேண்டியதும் அவசியமானது.

அத்துடன், இடமாற்றங்களும் முறையாக இடம்பெற வேண்டும். அவ்வாறு இடம் பெற்றால் மாத்திரமே சுகாதார கட்டமைப்பின் இருப்பைத் தீர்மானிக்க முடியும். சுகாதார அமைச்சின் சுகாதார சேவைப் பிரிவின் பணிப்பாளர், பிரதி பணிப்பாளர் நாயகம் உள்ளிட்டவர்களின் செயல்பாடுகளால் 23 ஆயிரம் சிரேஷ்ட மருத்துவர்களின் இடமாற்றங்கள் முற்றாக சீர்குலைந்துள்ளன. இது சுகாதார அமைச்சால் உருவாக்கப்பட்ட ஒரு குழப்பமாகும்.

ஆனால் சுகாதார அமைச்சரிடமிருந்து இதற்கான உறுதியான தீர்வு கிடைக்கவில்லை. இந்தப் பிரச்னை தீவிரமடைந்தமைக்கான காரணமும் இதுவே. 2025ஆம் ஆண்டுக்கான இடமாற்ற பட்டியல் 9 மாதங்கள் தாமதமாகவே வெளியானது. இதில் சுமார் 5 ஆயிரம் மருத்துவர்கள் உள்ளடங்குகின்றனர். அந்தப் பட்டியலில் காணப்பட்ட 78 வெற்றிடங்கள் சட்டத்துக்கு முரணாக தன்னிச்சையாக புறக்கணிக்கப்பட்டுள்ளன. இதனால் குறித்த 78 மருத்துவர்கள் மாத்திரமின்றி, பட்டியலுள்ள அனைவரும் பாதிக்கப்படுவர்.

அது மாத்திரமின்றி பின்தங்கிய பிரதேசங்களுக்கானமருத்துவ நியமனங்களும் இவ்வாறு தன்னிச்சையாக நிராகரிக்கப்பட்டுள்ளன. இதனால், எதிர்வரும் ஓரிரு மாதங்களில் பிரதான மருத்துவமனைகள் உட்பட சுமார் 135 பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள மருத்துவமனைகளை மூட வேண்டிய நிலைமை ஏற்படவுள்ளது.

ராஜித, கெஹெலிய காலங்களில் அதிகாரிகள் செய்ததையே தற்போதும் செய்கின்றனர். அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவையும் அவர்கள் இந்த யுகத்துக்குஅழைத்துச் செல்லவே முற்படுகின்றனர். இந்தப் பிரச்னைக்கு அமைச்சரிடமிருந்து தீர்வு கிடைக்காவிட்டால் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8 மணி முதல் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது - என்றார். (ஐ)



# ஆஸி. ஆளுநர் நாயகம் சமந்தா ஜனாதிபதியுடன் சந்தித்து பேச்சு

கொழும்பு, ஓக. 09

அவுஸ்திரேலிய ஆளுநர் நாயகம் சமந்தா ஜோய் மோஸ்டின் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவை நேற்றுமுன்தினம் சந்தித்து பேசினார்.

இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புத் துறைகளை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து உரையாடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்துக்கு தொடர்ந்து ஆதரவு வழங்க அவுஸ்திரேலியா தயாராக உள்ளது. இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்த தேவையான ஆதரவை வழங்க அவுஸ்திரேலியா தயாராக உள்ளது - என்றும் அவர் கூறினார்.

இலங்கையின் பொருளாதாரம், கல்வி, பாதுகாப்பு, சுற்றுலா, கடல்சார் விவகாரங்களில் அவுஸ்திரேலியாவிடமிருந்து கிடைத்த ஆதரவை ஜனாதிபதி இதன்போது பாராட்டினார். அத்துடன், அதிக எண்ணிக்கையிலான இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்பு, கல்வி மற்றும் தொழில் பயிற்சிக்கான மையமாக அவுஸ்திரேலியா மாறியுள்ளது என்று கூறிய ஜனாதிபதி, இந்த துறைகளில் அவுஸ்திரேலியாவின் அனுபவங்களிலிருந்து இலங்கை அதிகம் கற்றுக்கொள்ள முடியும். அந்த அனுபவங்களை வெற்றிகரமாக பகிர்ந்து கொள்ள இலங்கை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். (ஐ)

# பொலிஸ் மா அதிபராக வீரசூரிய பரிந்துரை!

கொழும்பு, ஓக. 09

பொலிஸ் மா அதிபராக நியமிப்பதற்காக பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் பெயரை அரசமைப்பு பேரவைக்கு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க பரிந்துரை செய்துள்ளார் என்று அறிய வருகிறது.

அரசமைப்பு பேரவை நேற்று முன்தினம் கூடிய போதிலும் இந்த விடயம் குறித்து விவாதிக்கப்படவில்லை. இந்த விடயம் குறித்து விவாதிப்பதற்காக அரசமைப்பு பேரவை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கூடவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.



# அஞ்சல் சேவை வளர்ச்சிக்கு சகல ஆதரவும் வழங்கப்படும்

## ஆசிய, பசுபிக் அஞ்சல் ஒன்றியம்

புதுடில்லி, ஓக. 09

நாட்டின் அஞ்சல் சேவையின் எதிர்கால வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து ஆதரவும் வழங்கப்படும் என்று ஆசிய பசுபிக் அஞ்சல் ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் வினய பிரகாஷ் சிங் உறுதியளித்துள்ளார்.

அஞ்சல் சேவையை மேம்படுத்தும் நோக்கில் திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்தவும், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவும் தங்கள் அமைப்பு ஆதரவு அளிக்கும் என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவுடனான சந்திப்பில் கூறினார்.

அஞ்சல் சேவையில் தகவல் தொழில்நுட்பத்தை இணைத்தல், அஞ்சல் சேவையை டிஜிற்றல் மயமாக்குதல் குறித்தும் இந்த சந்திப்பில் உரையாடப்பட்டன. (ஐ)

மனித புதைகுழி விவகாரம்

# சுயாதீன விசாரணைக்கு தேவையான சட்ட கட்டமைப்பு மறுசீரமைப்பு தேவை

## மாற்று கொள்கைகளுக்கான நிலையம்

கொழும்பு, ஓக. 09

மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் சுயாதீனமானதும் - பக்கச்சார்பற்றதும் பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்தியதுமான செயன்முறைக்கு துணையளிக்கக்கூடிய சட்ட மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகளை மேற்கொள்ள வேண்டும் என்று நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவிடம் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து அந்த நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் பாக்கிசோதி சரவணமுத்து நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு,

நாட்டில் உண்மை மற்றும் நீதியை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய முக்கிய மறுசீரமைப்புகள் தொடர்பில் நாம் பல தசாப்த காலமாக வலியுறுத்தி வருகின்றோம். அந்தவகையில் மனிதப் புதைகுழிகள் தொடர்பில் சமகாலத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் இலங்கையின் கடந்தகால வன்முறைகளுடன் தொடர்புடைய விவகாரங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படவேண்டும்.

மனிதப் புதைகுழி விவகாரத்தில் தடயவியல் ஆய்வு உள்ளடங்கலாக அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பாராட்டும் அதேவேளை, இவ்விடயத்தில் உண்மையைக் கண்டறிவதற்கும், நீதியைப் பெற்றுக்கொள்வதற்கும் உரியவாறான நிபுணத்துவம் மற்றும் வளங்கள் என்பன உடனடியாகத் தேவைப்படுகின்றன. இதற்கமைய மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்பில் சுயாதீனமானதும் பக்கச்சார்பற்றதும், பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்தியதுமான செயன்முறைக்குத் துணையளிக்கக்கூடிய சட்ட மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகளை மேற்கொள்ளுமாறும், அவற்றின் இயலுமையை வலுப்படுத்துமாறும் கோருகிறோம் - என்றும் கூறப்பட்டது. (ஐ)

# இத்தாலி - இலங்கை நட்புறவு சங்க தலைவராக சுனில் குமார கமகே!

கொழும்பு, ஓக. 09

பத்தாவது பாராளுமன்றத்தின் இலங்கை - இத்தாலி பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவராக இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சர் சுனில் குமார கமகே தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை - இத்தாலி பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை மீள நிறுவுவதற்கான கூட்டம் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவின் தலைமையில் நடைபெற்றபோதே இவர் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த நிகழ்வில், இலங்கைக்கான இத்தாலித் தூதுவர் டிமியானோ ஃப்ரங்கோவிக் விருந்தினராகக் கலந்துகொண்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி இலங்கை - இத்தாலி பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டார். (ஐ)

# 991 பி.வை.டி வகை வாகனங்கள் விடுவிப்பு

கொழும்பு, ஓக. 09

தடுத்து வைக்கப்பட்டுள்ள 991 பி. வை. டி. ரக மின்சார வாகனங்களை பல நிபந்தனைகளுக்கு உட்பட்டு விடுவிக்க மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஒப்புக்கொண்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட வாகனங்களை தடுத்து வைப்பதற்கு எதிராக ஜோன் கீல்ஸ் நிறுவனம் தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த பின்னர் இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது.

இதன்படி, சம்பந்தப்பட்ட வாகனங்கள் மீதான வரிகளுக்கு இடையிலான வித்தியாசமாகக் கணக்கிடப்பட்ட கிட்டத்தட்ட 360 கோடி ரூபாயை ஓர் அரச வங்கியில் உத்தரவாதமாக சமர்ப்பிக்க வேண்டும், மனுதாரர் நிறுவனம் அந்த உத்தரவாதத்துக்குப் பொருந்தக்கூடிய வட்டியை செலுத்த ஒப்புக்கொள்ள வேண்டும் - என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல தமிழ் அரசியல் கைதிகளையும் பொதுமன்னிப்பில் விடுதலை செய்க!

## சிறீதரன் எம். பி. கோரிக்கை



கொழும்பு, ஓக. 09

**பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் நீண்டகாலம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் கோரிக்கை விடுத்தார்.**

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் நேற்றுமுன்தினம் பாராளுமன்றில் நீதி அமைச்சர் விடயங்களை சுட்டிக்காட்டிய போதே சிறீதரன் எம். பி. இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

மேலும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பல ஆண்டுகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்க நடவடிக்கை எடுக்க அவதானிக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் குறிப்பிடுவது வரவேற்கத்தக்கது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கதிர்காமதம்பி சிவகுமார், விக்னேஸ்வரநாதன் பார்த்திபன், கிருஷ்ணசாமி ராமசந்திரன், சண்முகலிங்கம் சூரிய குமார், ஜோன்சன் கொலின் லெவன்டினோ, சச்சிதானந்தம் ஆனந்த சுதாகர், ஏ.எச். உமர் காதர், தங்கவேலு விமலன், செல்வராஜா கிருபாகரன், தம்பியையா பிரகாஷ் ஆகியோர் 14 முதல் 30 ஆண்டுகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களின் எதிர்காலம், அவர்களின் குடும்பத்தை கருத்தில் கொள்ளுங்கள், ஆனந்த சுதாகரனின் பிள்ளைகள் பெற்றோர் இல்லாமல் வாழ்கிறார்கள். அந்த பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பில் கரிசனை கொள்ளுங்கள்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் நீண்ட காலம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் - என்றார். (ஐ)

# தொழில் இன்மை பிரச்னை நாட்டில் தீவிரமடைந்துள்ளது

## எதிர்க்கட்சி தலைவர் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஓக. 09

நாட்டில் தீவிரமடைந்துள்ள தொழில் இன்மை பிரச்னைக்கு தீர்வு காணாமல் 2028ஆம் ஆண்டு முதல் எவ்வாறு அரச முறை கடன்களை மீள செலுத்துவது. மக்களுக்கு வழங்கிய "செல்வந்த நாடு - அழகிய வாழ்க்கை" வாக்குறுதி திட்டம் எப்போது அமுல்படுத்தப்படும். ஜனாதிபதி உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்க பல்வேறு தரப்பினர் முயற்சிப்பதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். நாட்டு மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்க வேண்டிய அவசியம் எதிர்க்கட்சிகளுக்கு கிடையாது. அரசாங்கத்தின் பலவீனத்தை வெளிப்படுத்தும்போது அதனை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சூழ்ச்சியின் ஊடாக அதிகாரத்தை கைப்பற்ற வேண்டிய தேவை எமக்கு கிடையாது. ஜனநாயக ரீதியாகவே ஆட்சிக்கு வர முயற்சிப்போம். பாரம்பரியமான எதிர்க்கட்சிகள் போன்று நாங்கள் செயல்படவில்லை. பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் எடுத்த சிறந்த திட்டங்களுக்கு நாங்கள் நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்கியுள்ளோம்.

அமெரிக்காவின் வரிகளை 44 சதவீதத்தில் இருந்து 20 சதவீதமாக குறைத்த போதிலும், ஏற்றுமதி மற்றும் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க அரசாங்கத்திடம் ஓர் உறுதியான திட்டம் இல்லை - என்றார். (ஐ)

# "நான் அவன் இல்லை"

## இராதகிருஷ்ணன் எம். பி.

கொழும்பு, ஓக. 09

ஜனாதிபதி நிதியத்தின் மூலம் நிதி பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர் பட்டியலில் உள்ள பி. இராதாகிருஷ்ணன் நானல்ல. நான் வி. இராதாகிருஷ்ணன். ஆகவே "நான் அவன் அல்ல" என்று வி. இராதாகிருஷ்ணன் எம். பி. தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் சிறப்புரிமை மீறல் பிரச்னையை முன்வைத்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

2005ஆம் ஆண்டுக்கு பின்னர் ஜனாதிபதி நிதியம் ஊடாக நிதி பெற்றவர்கள் தொடர்பில் அளிக்கப்பட்ட பதிலில் பி. இராதகிருஷ்ணனுக்காக திருமதி கே. இராதாகிருஷ்ணனுக்கு வெளிநாட்டு புலமைப்பரிசில் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த அறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு எனக்கு அவதூறு ஏற்படுத்தும் நோக்கில் பொய்யான தகவல்கள் பரப்பப்படுகின்றன. ஆனால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள "பி. இராதாகிருஷ்ணன்" என்னும் பெயர் "பெருமாள்பிள்ளை இராதாகிருஷ்ணன்" ஆக இருக்க வேண்டும். "வேலுசாமி இராதாகிருஷ்ணன்" என்ற என்னைப் பற்றியல்ல. அந்த நேரத்தில் நான் மாகாண சபையை பிரதிநிதித்துவப்படுத்திய உறுப்பினராக இருந்தேன். பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை - என்றார். (ஐ)

# ஆழ்கடலில் மரணிக்கும் மீனவருக்கான இழப்பீடு ரூ. 10 இலட்சமாக அதிகரிக்கும்

## கடற்றொழில் அமைச்சர் உறுதி

கொழும்பு, ஓக. 09

ஆழ்கடலில் மீன் பிடிக்கச் சென்று மரணமடையும் அல்லது பாதிக்கப்படும் மீனவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படும். மரணிக்கும் மீனவர்களுக்கு இதுவரை வழங்கப்பட்ட 2 இலட்சம் ரூபாய் இழப்பீட்டை 10 இலட்சம் ரூபாயாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்று கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சர் இ. சந்திரசேகர் கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தில் எம். எஸ். உதுமாலெப்பை எம்பி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டிலிருந்து கடலுக்கு மீன் பிடிக்க சென்று இவ்வாறு அந்தந்த நாடுகளின் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் குறித்த படகுகள் அந்த நாட்டின் வழக்குப் பொருளாக பயன்படுத்தப்படுவதால் உடனடியாக அந்த படகுகளை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க முடியாது. வழக்கு நடவடிக்கைகள் முடிந்த பின்னர் அந்த படகுகளை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

கடலுக்கு மீன் பிடிக்க செல்பவர்கள் பல்வேறு அனர்த்தங்களினால் பாதிக்கப்படுவது உண்டு. அவர்களில் சிலர் தெரிந்தே கடல் எல்லைகளைத் தாண்டி பின்பற்ற வேண்டிய சட்டங்களை மீறி செயல்படும் போதும் இவ்வாறான காணாமல் போதல் அல்லது பாதிப்புகள் இடம்பெறுகின்றன.

மீனவர்கள் பலர் மாலைதீவு, இந்தியா மொரீசியஸ் உட்பட பல்வேறு நாடுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் படகுகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. அவர்கள் நடைமுறையிலுள்ள சட்டங்களை முறையாக பின்பற்றி செயல்பட்டிருந்தால் அவர்களுக்கும் இழப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ)

# இந்தியாவின் நிலையை பார்த்து சிரிக்காதீர்கள்

## ஹர்ஷ டி சில்வா எம். பி.



கொழும்பு, ஓக. 09

அமெரிக்காவின் தீர்வை வரி பற்றி அதிகம் பேசப்பட்டுள்ளது. இந்தியாவின் நிலையை பார்த்து சிரிக்க வேண்டாம். ஏனெனில் நாம் வீழ்ந்திருந்த போது இந்தியா தான் எமக்கு கைகொடுத்தது - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க சபையில் சண்டித்தனமான முறையில் உரையாற்றினார். எம்மை கேலிக்குள்ளாக்கினார். ஜனாதிபதி எமது பழைய நண்பர் என்பதால் நாங்கள் அவரை நகைப்புக்கு உள்ளாக்கவில்லை. ஜனாதிபதி பதவிக்கான கௌரவத்தை நாங்கள் அவருக்கு வழங்குவோம்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்ட நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட செயல் திட்டத்தை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளார். மாற்றமின்றி செயல்படுத்துகிறார். பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்த நாட்டையே பொறுப்பேற்றதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். இது முற்றிலும் தவறானது.

2024 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்படும்போது பொருளாதார வளர்ச்சி 5 சதவீதமாகவும், திறைசேரியின் கையிருப்பு 500 கோடி டொலர்களாகவும் இருந்தது. அத்துடன் 70 சதவீதமாக காணப்பட்ட பணவீக்கம் 1 சதவீதமாக குறைக்கப்பட்டது. ஆகவே, பொருளாதார ரீதியில் வீழ்ந்து எழுந்த நாட்டையே ஜனாதிபதி பொறுப்பேற்றார். வீழ்ச்சியடைந்த நாட்டை பொறுப்பேற்றோம் என்று பொருளாதாரம் பற்றி தெரியாதவர்களிடம் குறிப்பிடுங்கள் முடிந்தால் எம்முடன் விவாதத்துக்கு வாருங்கள் தரவுகளுடன் விடயங்களை வெளிப்படுத்து கிறோம் - என்றார். (ஐ)

# சீன உர மோசடியாளர்களுக்கு ஒருபோதும் மன்னிப்பு இல்லை

## விவசாயத்துறை பிரதி அமைச்சர்

கொழும்பு, ஓக. 09

சீன நிறுவனத்திடமிருந்து தரமற்ற உரத்தை இறக்குமதி செய்ததால் சீன நிறுவனத்துக்கு 69 இலட்சம் டொலர் நட்டஈடு செலுத்த நேரிட்டது. இந்த முறைகேட்டுடன் தொடர்புடையவர்களுக்கு மன்னிப்பு இல்லை, என்று விவசாயத்துறை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ரத்னசிறி முன்வைத்த கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியின்போது சீன நிறுவனத்திடமிருந்து 96 ஆயிரம் மெற்றிக் தொன் உரம் கொள்வனவு செய்வதற்கு முறையற்ற வகையில் விலைமனுகோரல் செய்யப்பட்டது. இதற்கமைய முதற்கட்டமாக 20 ஆயிரத்து 505 மெற்றிக் தொன் உரம் இறக்குமதி செய்ய அனுமதியளிக்கப்பட்டது.

சீனாவில் இருந்து இறக்குமதி செய்ய அனுமதியளிக்கப்பட்ட உரம் இலங்கையின் காலநிலைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என அறிவித்ததன் பின்னர் சீன கப்பல் உரத்தை துறைமுகத்துக்கு கொண்டு வராமல் கடலில் நங்கூரமிட்டிருந்தது. இதனால் இலங்கைக்கு பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டன.

இறுதியில் இலங்கைக்கு ஒரு மெற்றிக் தொன்கூட உரம் கிடைக்கவில்லை. 69 இலட்சம் டொலர் நட்டஈட்டை சீன நிறுவனத்துக்கு செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த முறைக்கேட்டுடன் தொடர்புடைய தரப்பினருக்கு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். எவருக்கும் மன்னிப்பு கிடைக்காது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை எண்ணெய்க் குதம் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்

## குகதாசன் எம். பி. வலியுறுத்தல்

திருகோணமலை, ஓக. 09

**“பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம், திருகோணமலை எண்ணெய்க் குதம், காங்கேசன்துறை துறைமுகம், நிலநெய் குழாய் திட்டம் முதலிய திட்டங்கள் விரைவாக செயல்படுத்தப்பட வேண்டும்”- இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“2023 ஆம் ஆண்டில் ஆள்வீத வருமானம் 3800 ஆக காணப்பட்டதுடன் மனிதவள அபிவிருத்தி சுட்டி வளர்ச்சி இல்லாமல் இருந்தது. வறுமை அண்ணளவாக 26 சதவீதமாக ஆகியது. நுகர்வுச் சுட்டி வீழ்ச்சியடைந்தது.

நிதி உதவிகள் மற்றும் சீர்திருத்தங்கள் காரணமாக 2024 ஆம் ஆண்டில் ஆள்வீத வருமானம் 4500 ஆக உயர்ந்ததுடன், மனிதவள அபிவிருத்தி சுட்டி சீரான வளர்ச்சி கண்டது. வறுமை 24 சதவீதமாக குறைந்தது.

2025 ஆம் ஆண்டில் ஆள்வீத வருமானம் 4,600 இற்கும் மேல் இருக்கும் எனவும் வறுமை இல் 22.7 சதவீதமாக குறையும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. நுகர்வுச் சுட்டி மேலேறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

2025 ஆம் ஆண்டின் அண்மைக்காலத் தரவுகள் முதன்மையான பொருளாதார குறிகாட்டிகளில் நீடித்த முன்னேற்றத்தைக் காட்டுகின்றன. இது மக்களது வாழ்க்கைத் தரம் மேம்பட்டு வருவதனைச் சுட்டிக்காட்டுகிறது.

எனினும் இவ்வாண்டில் அமெரிக்கா முன்மொழிந்துள்ள வரி விதிப்பானது 44 சதவீதத்தில் இருந்து 20 சதவீதமாக குறைக்கப்பட்டாலும் இது ஆடை ஏற்றுமதியை கடுமையாகப் பாதிக்கும். இது இலங்கைப் பொருளாதரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் அண்ணளவாக 24 வீதமானவை ஐக்கிய அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

வினைத்திறன் உள்ள தொழிலாளர் மற்றும் மூளைசாலிகள் வெளியேற்றம், திறன் பொருத்தமின்மை, குறைந்த பணியாளர் பங்கேற்பு முதலியன உற்பத்தித் திறனைப் பாதிக்கும்.

எனவே, இலங்கையானது, மரபு சார் ஏற்றுமதிகளில் தொடர்ந்து தங்கியிருக்காமல் ஏற்றுமதிகளை பல்வகைப்படுத்துவதோடு குறுகிய சந்தைகளைச் சார்ந்திருப்பதைக் குறைத்தலும் வேண்டும்.

மேலும் திறமையற்ற அரச தொழில் முயற்சியாண்மைகளை மறுசீரமைத்து வருவாய் தரக்கூடியவைகள் ஆக மாற்றுவதோடு அரச, தனியார் கூட்டுடமை முயற்சிகளை ஊக்குவித்தலும் வேண்டும்.

அதேபோன்று சமூகப் பாதுகாப்பை வலுப்படுத்துவதோடு கல்வி, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து முதலியவற்றை மேம்படுத்தி மனித மூலதனத்தை அபிவிருத்தி செய்யவும் வேண்டும்.

இறுதியாக இன்றைய உலக ஒழுங்கிற்கு ஏற்ப எண்ம மாற்றம், செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு மற்றும் பசுமை முதலீடுகளை அதிகரித்தல் முதலியனவும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கைப் பொருளாதாரம் இப்பொழுது மீட்பு நிலை நோக்கி பயணிக்கிறது. எனினும் கொள்கைப் பின்வாங்கல், கடன் சுமை, வறுமை, வேலைவாய்ப்பு பற்றாக்குறை முதலியன இன்னும் தீரவில்லை. அடுத்த இரண்டு ஆண்டுகள் முதன்மை ஆனவை ஆகும்.

நாடு முன்னேறும் பொழுது, பொருளாதார உறுதிப்பாட்டை சமூக சமத்துவத்தோடு சமநிலைப்படுத்துவதிலும், சீர்திருத்தத்திற்கான அரசியல் ஒருமித்த கருத்தைப் பேணுவதிலுமே இந்த மீட்சி நீண்ட காலத்திற்கு நிலையானதாக இருக்குமா என்பதனை முடிவு செய்யும்.

குறுகிய கால மீட்சியை நீண்ட கால மீட்சியாக மாற்றுவதற்கு உறுதியான சீர்திருத்தங்கள் மற்றும் அனைத்து பிராந்தியங்களையும் உள்ளடக்கிய கொள்கைகள் பன்னாட்டு ஆதரவோடு மேற்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கையின் உறுதித் தன்மைக்கான பாதை இந்தியாவின் நெருக்கமான ஒத்துழைப்போடு கட்டமைக்கப்பட வேண்டும்.

இந்தியாவோடு இணைந்து பணியாற்றுவது பிராந்திய நலன்களை சமநிலைப்படுத்தும், அதே வேளையில் அமெரிக்க எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதற்கும் இலங்கையை நெருக்கமாகக் கொண்டுவருகிறது.

குறிப்பாகத் தாமதமின்றி இறுதி செய்யப்பட வேண்டிய பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம், திருகோணமலை எண்ணெய்க் குதம், காங்கேசன்துறை துறைமுகம், நிலநெய் குழாய் திட்டம் முதலிய திட்டங்கள் விரைவாக செயல்படுத்தப்பட வேண்டும்.

இவை இலங்கையின் பொருளாதார மாற்றத்துக்கு உண்மையான நம்பிக்கையை வழங்கும்”- என்றார். (எ)



## திருகோணமலையில் விசேட சோதனைகள்

திருகோணமலை, ஓக. 09

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் ஜி. எம். ஹேமந்த குமாரவின் வழிகாட்டலுக்கமைவாக அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் திணைக்களத்தின் அதிகாரிகளால் நேற்று முன்தினம் திருகோணமலை நகர்ப் பகுதியில் விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

திருகோணமலை நகரை அண்டிய பகுதிகளான பொதுச் சந்தைகள், அங்காடி வியாபார நிலையங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கிழக்கு மாகாண அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் வீ. விக்னேஷ்வரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்த சோதனை நடவடிக்கையின் போது, பொலிஸ் அதிகாரிகளின் உதவியுடன் பாவனைக்கு உதவாத தராசுகள், முத்திரையிடப்படாத நிலுவை அளவீட்டுக் கருவிகள் போன்றவற்றை பயன்படுத்தி வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. (எ)

# தவிசாளராக மீண்டும் செந்தில்குமார் தெரிவு

ஆரையம்பதி, ஓக. 09

மட்டக்களப்பு - மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச சபைக்கான புதிய தவிசாளராக மீண்டும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் காத்தலிங்கம் செந்தில்குமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தவிசாளர் பதவிக்கு தெரிவு செய்வதற்கான கூட்டம் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம். அஸ்மி மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோர் பிரசன்னத்தில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது புதிய தவிசாளருக்கான முன்மொழிவை உள்ளூராட்சி ஆணையாளர் கோரினார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மண்முனைப்பற்று பிரதேச சபையின் பிரதித் தவிசாளர் காத்தலிங்கம் செந்தில்குமார் முன்மொழியப்பட்டார்.

தவிசாளருக்கான வேறு தெரிவுகள் இன்மையால் ஏகமனதாக மண்முனைப்பற்றின் தவிசாளராக கா. செந்தில்குமார் தெரிவு செய்ப்பட்டார்.

பிரதேச சபையின் உப தவிசாளருக்கான பதவியானது தற்போது வறிதாக்கப்பட்டுள்ளமையால், மீண்டும் குறித்த பதவிக்கான வெற்றிடத்தை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு தெரிவுசெய்யப்படும் என உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்தார்.

முன்னர் தெரிவுசெய்யப்பட்ட தவிசாளர் த. மாணிக்கராஜா அண்மையில் காலமாகியதன் காரணமாக புதிய தவிசாளர் தெரிவு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# மூதூரில் நேற்று கோர விபத்து விவசாய போதனாசிரியர் பலி



மூதூர், ஓக. 09

மூதூரில் நேற்றுக்காலை இடம்பெற்ற கோர விபத்தில் சிக்கி விவசாய போதனாசிரியர் ஒருவர் பலியானார்.

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் மூதூர் 64ஆம் கட்டை பச்சநூர் சந்தியில் கார் - டிப்பர் மோதி இந்த விபத்து இடம்பெற்றது.

தோப்பூரில் இருந்து மூதூர் பிரதேசத்தை நோக்கி பயணித்த காரும் மூதூர் பிரதேசத்தில் இருந்து பயணித்த டிப்பரும் நேருக்கு நேர் மோதியது.

காரில் பயணித்த விவசாய போதனாசிரியர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். மற்றைய நபர் படுகாயமடைந்த நிலையில் மூதூர் தள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# மீள்குடியேற்ற அமைச்சின் கீழ் வீட்டு திட்டங்களுக்கு அடிக்கல்

சம்மாந்துறை, ஓக. 09

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மீள்குடியேற்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இவ் வருடம் தெரிவு செய்யப்பட்ட 08 பயனாளிகளின் வீடுகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் வீடு கட்டுவதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எல். முஹம்மது ஹனீபா தலைமையில் மல்வத்தை கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைபெற்றது.

இதில், பிரதம விருந்தினராக அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எம். ஏ. முனாசீர் கலந்து கொண்டார்.

மேலும், இந்த நிகழ்வில் சம்மாந்துறை பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல். முஹம்மது அஸ்லம், மாவட்ட செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். அற்புதன், அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ. ரக்கீபா, எம். சசீர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம். ரிஸ்வான், கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

இந்த வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 4 வீடுகளும் 9 இலட்சம் ரூபாயில் 4 வீடுகளும் அமைப்பதற்கு அமைச்சு மட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (எ)

## நாவிதன்வெளி சுபமங்களா மண்டப அபிவிருத்திக்கு அடிக்கல் நாட்டல்

நாவிதன்வெளி, ஓக. 09

அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச சபையின் சுபமங்களா மண்டப அபிவிருத்திக்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

மாகாண நன்கொடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும் இந்தக் கலாசார மண்டபக் கட்டடத்துக்கான அடிக்கல்லை தவிசாளர் இ. ரூபசாந்தன் நட்டு வைத்தார். அதனைத் தொடர்ந்து உள்ளூராட்சி உதவியாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

திருமண வைபங்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்காக பயன்படுத்தப்படும் இந்த மண்டபத்தின் விருந்துபசார நடடிக்கைக்காக புறம்பான வளாக மொன்றை ஏற்படுத்தும் நோக்கிலேயே இந்த அபிவிருத்திச் செயன்முறை நடைபெற்றது. (எ-08)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை போல சீனாவுக்கும் இரு மடங்கு வரி விதிக்கப்படும்

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை



வாஷிங்டன், ஓக. 09

**இந்தியாவைப் போல சீனாவுக்கும் இரு மடங்கு வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.**

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு ஓகஸ்ட் 7ஆம் திகதி முதல் 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என ட்ரம்ப் அறிவித்திருந்தார். இந்த நிலையில், ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்தவில்லை எனக் கூறி, மேலும் 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என அறிவித்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ட்ரம்ப் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது, "ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்தவில்லை எனக் கூறி இந்தியாவுக்கான வரியை இரண்டு மடங்காக உயர்த்தினீர்கள். ஆனால், இந்தியாவை விட ரஷ்யாவிடம் கச்சா எண்ணெயை அதிகம் வாங்கும் சீனா மீதான வரியை உயர்த்தாதது ஏன்" என செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த ட்ரம்ப் கூறுகையில், "இந்தியாவுக்கு கூடுதல் வரி விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டு 8 மணி நேரம் தான் ஆகிறது. அடுத்து என்ன நடக்கிறது என்பதை பொறுத்திருந்து பாருங்கள். ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு வாங்கும் மேலும் பல நாடுகளுக்கு கூடுதல் வரி விதிக்கப்படும்.

ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்குவதில் சீனா முதலிடத்திலும் இந்தியா இரண்டாம் இடத்திலும் உள்ளன என்பது உண்மைதான். இந்த நிலையில், இந்தியாவுக்கு கூடுதல் வரி விதித்திருப்பது சீனாவுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகும். இந்தியாவைப் போல சீனாவுக்கும் கூடுதல் வரி விதிக்கப்படும்"- என்றார். (எ)

# சீனாவில் தொங்குபாலம் அறுந்து விபத்து: ஐவர் பலி


## 24 பேர் படுகாயம்

பீஜிங், ஓக. 09

சீனாவில் தொங்குபாலம் அறுந்து விபத்துக்குள்ளானதில் 5 பேர் உயிரிழந்தனர்.

சீனாவின் கசாக் மாகாணம் ஜின்ஜியாங் நகரம் இயற்கை எழில் வாய்ந்த சுற்றுலா நகரமாகும். மலைகள் நிறைந்த இந்தப் பகுதியில் உள்ள ஆற்றின் குறுக்கே தொங்குபாலம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஏறி நின்று இயற்கை அழகை ரசிப்பதற்காக ஏராளமானோர் அங்கு செல்வது வழக்கம். அந்த வகையில் நேற்று முன்தினம் சுற்றுலாப் பயணிகள் பலர் அங்கு சென்றிருந்தனர்.

அப்போது அந்தப் பாலத்தின் கேபிள் திடீரென அறுந்தது. இதனால் பாலத்தின் மீது நின்றவர்கள் ஆற்றங்கரை அருகே கற்கள் நிறைந்த பகுதியில் விழுந்தனர். மீட்புப் படையினர் அங்கு செல்வதற்குள் 5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.



படுகாயமடைந்த 24 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது.

*ரஷ்யா - உக்ரைன்*

# போர் முடிவுக்கு வருமா? ட்ரம்ப் - புடின் சந்திப்பு

மொஸ்கோ, ஓக. 09

ரஷ்யா - உக்ரைன் இடையேயான போர் நெருக்கடிக்கு மத்தியில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இருவரும் அடுத்த வாரம் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

புடின் மீது அதிகரித்து வரும் விரக்தியை வெளிப்படுத்தி, புதிய தடைகளை விதிக்கப்போவதாக அச்சுறுத்திய பின்னர், உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வர ட்ரம்ப் ஒரு திருப்புமுனையை எதிர்பார்க்கும் நிலையில் புடினும் ட்ரம்பும் வரும் நாட்களில் சந்திப்பார்கள் என்று ரஷ்ய ஜனாதிபதி மாளிகையான கிரெம்ளின் தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் 3 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகிறது. இதை முடிவுக்கு கொண்டு வருவதில் ட்ரம்ப் தீவிரமாகவுள்ளார்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்படுத்த இரு தரப்பிலும் தீவிர பேச்சுக்களை நடத்தி வருகிறார். இதற்கு உக்ரைன் தரப்பில் ஒப்புக்கொண்டபோதும் ரஷ்யா இன்னும் இறங்கி வரவில்லை.

எனவே, அந்த நாடு மீது அதிக பொருளாதார தடையை விதிக்க ட்ரம்ப் முடிவு செய்துள்ளார். இதற்காக நேற்று வெள்ளிக்கிழமை வரை ரஷ்யாவுக்கு அவர் கெடு விதித்திருந்தார். இதற்கு மத்தியில் புடினுடன் பேச்சு வார்த்தை நடத்த ட்ரம்பின் சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்காப் மொஸ்கோ சென்றார். அவர் புடினை சந்தித்து பேச்சு நடத்தி னார்.

இதைத்தொடர்ந்து புடின் - ட்ரம்ப் இருவரும் சந்தித்து பேசுவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு புடின் ஒப்புதல் அளித்துள்ளார். இந்த சந்திப்பு அடுத்த வாரம் நடைபெற வாய்ப்பு உள்ளதாக புடினின் வெளிவிவகார ஆலோசகர் யுரி உஷாகோவ் தெரிவித்தார். எனினும், இந்தச் சந்திப்பு நடைபெறும் இடம் குறித்து அவர் தெரிவிக்கவில்லை.

'முதலில் ட்ரம்புடன் ஒரு இருதரப்பு சந்திப்புக்கு ஏற்பாடு செய்வது என நாங்கள் பரிந்துரைத்தோம். இந்தச் சந்திப்பு மிகவும் வெற்றிகரமாகவும் ஆக்கபூர்வமாகவும் இருக்கும் என நம்புகிறோம்' என தெரிவித்தார். இதே நேரம் இந்தச் சந்திப்பில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியையும் பங்கேற்க செய்வது என்ற ட்ரம்ப் தூதுவரின் பரிந்துரை குறித்து விவாதிக்கவில்லை என்றும் அவர் கூறினார். (எ)

# விவசாயிகளின் நலன் காக்க ஒட்டுமொத்த தேசமும் துணை

## இந்தியப் பிரதமர் மோடி உறுதி

புதுடில்லி, ஓக. 09

விவசாயிகள், மீனவர்கள், கால்நடை வளர்ப்போர் நலனில் இந்தியா சமரசம் செய்து கொள்ளாது. அவர்களது நலனை ஒருபோதும் விட்டுத்தராது. அதற்காக எந்த விலையும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உறுதிபட தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் 100இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான புதிய வரிவிகிதங்களை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார். வரி விகிதத்தை குறைப்பது தொடர்பில் இந்தியா - அமெரிக்கா இடையே கடந்த 6 மாதங்களாக பேச்சுக்கள் நடைபெற்றன.

அமெரிக்காவில் இருந்து பால், பாலாடை கட்டி, நெய் ஆகியவற்றை இந்தியாவில் இறக்குமதி செய்ய அந்த நாடு விரும்புகிறது. இது இந்திய விவசாயிகளின் நலனுக்கு எதிரானது என்பதால் அமெரிக்க பால் பொருட்கள் இறக்குமதிக்கு அனுமதி வழங்க மத்திய அரசு மறுத்துவிட்டது.



இதேபோல, அமெரிக்காவில் இருந்து கோதுமை, சோளம், ஆப்பிள், திராட்சை வகைகளை இந்தியாவில் விற்பனை செய்யவும் அந்த நாடு அனுமதி கோரி வருகிறது. அத்தோடு மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவு தானியங்களையும் இந்தியாவில் விற்பனை செய்ய அமெரிக்கா விரும்புகிறது. இதற்கும் மத்திய அரசு அனுமதி வழங்கவில்லை.

மேலும், 'ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கக் கூடாது. அமெரிக்க நிறுவனங்களிடம் இருந்து மட்டுமே இறக்குமதி செய்யவேண்டும்' என்றும் ட்ரம்ப் நிர்ப்பந்தம் செய்து வருகிறார். ஆனால், அமெரிக்காவின் அழுத்தத்தையும் மீறி, ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய்யை இந்தியா தொடர்ந்து கொள்முதல் செய்து வருகிறது.

இந்தச் சூழலில், இந்தியப் பொருட்களுக்கான வரியை 25 சதவீதத்தில் இருந்து 50 சதவீதமாக அதிகரித்து ட்ரம்ப் அறிவித்துள்ளார். இந்த நிலையில், தமிழக வேளாண் விஞ்ஞானி மறைந்த எம். எஸ். சுவாமிநாதன் நூற்றாண்டு சர்வதேச மாநாடு புதுடில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பிரதமர் மோடி உரையாற்றுகையில், நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்ய, எம்.எஸ்.சுவாமிநாதன் தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார். நான் குஜராத் முதல்வராக இருந்த காலத்திலேயே அவரோடு நெருங்கிய தொடர்பில் இருந்தேன். விவசாயிகள், மீனவர்கள், கால்நடை வளர்ப்போரின் நலன்களில் மத்திய அரசு சமரசம் செய்துகொள்ளாது. அவர்களது நலனை ஒருபோதும் விட்டுத் தராது. இதற்காக எந்த விலையும் கொடுக்க தயாராக இருக்கிறோம் - என்றார். (எ)

# பேராசைக்கு அடிபணிந்தால் மிரட்டி ஆதாயம் அடைவார்

## ட்ரம்ப் மீது சீனத் தூதுவர் சாடல்

புதுடில்லி, ஓக. 09

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வரி விதிப்பு நடவடிக்கை உலகம் முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகிறது. இது குறித்து இந்தியாவுக்கான சீனத் தூதுவர் சூ பிஹோங் தனது சமூக வலைத்தள பதிவில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 'ஒருவரது பேராசைக்கு அடிபணிந்தால் அவர் மீண்டும் மீண்டும் நம்மை மிரட்டி ஆதாயம் அடைய முயற்சி செய்வார். இடத்தை கொடுத்தால் மடத்தை பறிப்பார்' என்று தெரிவித்துள்ளார். அத்துடன், சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ - பிரேசில் ஜனாதிபதியின் சிறப்பு ஆலோசகர் செல்சோ இடையிலான தொலைபேசி உரையாடல் விவரத்தையும் சீனத் தூதுவர் சூ பிஹோங் பகிர்ந்துள்ளார். "வரி விகிதத்தை ஆயுதமாக பயன்படுத்தி இதர நாடுகளை அடிபணிய வைக்க முயற்சி செய்வது ஐ.நா. மற்றும் உலக வர்த்தக அமைப்பின் விதிகளுக்கு எதிரானது. இத்தகைய செயல்கள் நிலைத்திருக்காது" என்று சீன அமைச்சர் வாங் யீ தெரிவித்துள்ளார். (எ)

# "சிக்கல்கள் தீரும் வரை வர்த்தக பேச்சு இல்லை"

வாஷிங்டன், ஓக. 09

சிக்கல்கள் தீர்க்கப்படும் வரை இந்தியாவுடன் வர்த்தகம் தொடர்பான பேச்சுக்கள் இல்லை என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் இந்தியப் பொருட்களுக்கான மொத்த வரி விதிப்பு 50 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். அவரிடம், '50 சதவீத வரிவிதிப்புக்குப் பிறகு இந்தியாவுடன் வர்த்தக பேச்சுகள் நடத்தப்படுமா? என்று கேட்கப்பட்டது. இதற்கு பதிலளித்த ட்ரம்ப், "சிக்கல்கள் தீர்க்கப்படும் வரை இந்தியாவுடன் வர்த்தகப் பேச்சுக்கள் எதுவும் இல்லை"- என்று தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடா ஓபின் ரென்னிஸ்:

# நவோமி ஒசாகாவை வீழ்த்தி சம்பியனானார் விக்ரோரியா


றொரண்டோ, ஓக. 09

கனடா ஓபின் ரென்னிஸ் தொடரில் நவோமி ஒசாகாவை வீழ்த்தி விக்ரோரியா எம்போகோ சம்பியனானார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்ற கனடா ஓபின் சர்வதேச ரென்னிஸ் போட்டி றொரண்டோ நகரில் நடைபெற்று வந்தது. இதில் நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் ஜப்பானின் முன்னணி வீராங்கனையான நவோமி ஒசாகா கனடாவின் விக்ரோரியா எம்போகோ உடன் மோதினார்.

இந்தப் போட்டியின் முதல் செற்றை 6-2 என்ற புள்ளிக்கணக்கில் ஒசாகா கைப்பற்றினார். தொடர்ந்து நடைபெற்ற 2ஆவது மற்றும் 3ஆவது செற்களில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய விக்ரோரியா எம்போகோ 6-4, 6-1 என்ற செற் கணக்கில் நவோமி ஒசாகாவுக்கு அதிர்ச்சி அளித்தார்.

இதன் மூலம் 2-6, 6-4, 6-1 என்ற செற் கணக்கில் ஒசா



காவை வீழ்த்தி விக்ரோரியா எம்போகோ சம்பியன் பட்டத்தை வென்றார். (எ)



## கனடா ஓபின் ரென்னிஸ் பென் ஷெல்டன் சம்பியன்


றொரண்டோ, ஓக. 09

கனடா ஓபின் ரென்னிஸ் தொடரில் பென் ஷெல்டன் சம்பியனானார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்ற கனடா ஓபின் சர்வதேச ரென்னிஸ் போட்டி றொரண்டோ நகரில் நடைபெற்று வந்தது. இதில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் அமெரிக்காவின் முன்னணி வீரர் பென் ஷெல்டன், ரஷ்யாவின் கரேன் கச்சனோவ் உடன் மோதினார்.

இந்தப் போட்டியின் முதல் செற்றை 7-6 (7-5) என்ற புள்ளிக்கணக்கில் கரேன் கச்சனோவ் கைப்பற்றினார். தொடர்ந்து நடைபெற்ற அடுத்த இரு செற்களில் ஆதிக்கம் செலுத்திய பென் ஷெல்டன் 6-4, 7-6 (7-3) என்ற புள்ளிக்கணக்கில் கரேன் கச்சனோவை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றார். (எ)

## பாலியல் குற்றச்சாட்டு பாகிஸ்தான் வீரர் கைது



லண்டன், ஓக. 09

பாலியல் குற்றச்சாட்டின் பேரில் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் ஹைதர் அலி கைது செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் ஷாஹீன்ஸ் அணியுடன் இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் இருந்த 24 வயது இளம் வீரர் ஹைதர் அலி, பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டில் கிரேட்டர் மான்செஸ்டர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் வம்சாவளியைச் சேர்ந்த ஒரு பெண் வழங்கிய முறைப்பாட்டின் பேரில் பெக்கன்ஹாம் மைதானத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார். விசாரணை நடைபெற்று வருவதால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அவரை உடனடியாக தற்காலிகமாக இடைநீக்கம் செய்துள்ளது.

விசாரணை அதிகாரிகள் ஹைதரின் கடவுச்சீட்டை பறிமுதல் செய்து பிணையில் விடுவித்துள்ளனர். ஹைதர், விசாரணையின் போது தன்னை குற்றமற்றவர் என வலியுறுத்தியதாக வட்டாரங்கள் கூறுகின்றன. பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இங்கிலாந்து அதிகாரிகளுடன் இணைந்து விசாரணையில் முழுமையாக ஒத்துழைப்பதாகவும் தேவையானால் தனிப்பட்ட விசாரணையையும் நடத்தும் எனவும் தெரிவித்துள்ளது.

2020 ஆம் ஆண்டு 19 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தானுக்காக விளையாடிய ஹைதர் அலி, இதுவரை 2 ஒருநாள் மற்றும் 35 ரி - 20 சர்வதேச போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

ஹைதர் அலிக்கு இது முதல் சர்ச்சை அல்ல. 2021ஆம் ஆண்டு பாகிஸ்தான் சுப்பர் லீக்கின் போது கொரோனா தடுப்பு கட்டுப்பாடுகளை மீறியதற்காக பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையால் இடைநீக்கம் செய்யப்பட்டார். இதே ஆண்டில் இங்கிலாந்து மற்றும் மேற்கு இந்திய தீவுகள் சுற்றுப்பயண அணியில் இருந்தும் நீக்கப்பட்டார். (எ)

## சிம்பாவே தடுமாற்றம் நியூசிலாந்து ஆதிக்கம்

### ஒரு விக்கெட் இழப்புக்கு 174 ஓட்டங்கள் குவிப்பு

புலவாயோ, ஓக. 09

சிம்பாவேக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் முதல் நாள் முடிவில் நியூசிலாந்து அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 174 ஓட்டங்கள் குவித்துள்ளது.

நியூசிலாந்து கிரிக்கெட் அணி, சிம்பாவேயில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது மற்றும் கடைசி போட்டி புலவாயோவில் நேற்று முன்தினம் தொடங்கியது. முதல் இன்னிங்ஸை தொடங்கிய சிம்பாவே அணி ஆரம்பம் முதலே நியூசிலாந்து பந்துவீச்சில் தடுமாறியது.

48. 5 ஓவர்கள் தாக்குப்பிடித்த சிம்பாவே முதல் இன்னிங்ஸில் 125 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. அபாரமாக பந்துவீசிய நியூசிலாந்து தரப்பில் மேட் ஹென்றி 5 விக்கெட்களும் சக்காரி பவுல்க்ஸ் 4 விக்கெட்களும் வீழ்த்தினர்.

இதனையடுத்து முதல் இன்னிங்ஸை தொடங்கிய நியூசிலாந்து முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 39 ஓவர்களில் ஒரு விக்கெட் மட்டும் இழந்து 174 ஓட்டங்கள் எடுத்துள்ளது. நியூசிலாந்து தரப்பில் டெவான் கொன்வே 79 ஓட்டங்களுடனும் ஜேக்கப் டபி 8 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (எ)





## "இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் 18,000 ஓட்டங்கள் குவிப்பார்"

புதுடில்லி, ஓக. 09

ஜோ ரூட், சச்சின் டெண்டுல்கரை சீக்கிரம் முந்தி விடுவார் என இங்கிலாந்து முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் மான்டி பனேசர் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் குவித்தவர்களின் பட்டியலில் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் (200 டெஸ்டில் 15,921 ஓட்டங்களுடன்) முதலிடத்தில் உள்ளார். அவரை விட 2378 ஓட்டங்கள் பின்தங்கியுள்ள இங்கிலாந்தின் ஜோ ரூட் இதுவரை 158 டெஸ்ட்களில் விளையாடி 39 சதம் உட்பட 13,543 ஓட்டங்கள் சேர்த்துள்ளார்.

இந்த நிலையில் ஜோ ரூட், டெண்டுல்கரை சீக்கிரம் முந்தி விடுவார் என மான்டி பனேசர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் கூறியதாவது, ரூட், டெண்டுல்கரின் சாதனையை நிச்சயம் முறியடிப்பது மட்டுமின்றி, அதையும் தாண்டி நிறைய ஓட்டங்கள் குவிப்பார்.

இப்போது அவருக்கு 34 வயதாகிறது. எப்படியும் இன்னும் 6 ஆண்டுகள் விளையாடுவார். அநேகமாக மேலும் 4 ஆயிரம், 5 ஆயிரம் ஓட்டங்கள் எடுப்பார். 40 வயது வரை ஜோ ரூட் விளையாடும் போது டெஸ்டில் 18 ஆயிரம் ஓட்டங்கள் எடுத்திருப்பார் என்று கருதுகிறேன்- என்றார். (எ)

## உதைபந்தாட்ட தரவரிசை ஸ்பெயின் அணி முதலிடம்

ஷூரிச், ஓக. 09

மகளிர் உதைபந்தாட்ட தரவரிசையில் ஸ்பெயின் அணி மீண்டும் முதலிடம் பிடித்துள்ளது.

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம், மகளிர் அணிக்கான புதிய தரவரிசை பட்டியலை வெளியிட்டது. இதில் ஸ்பெயின் அணி மீண்டும் முதல் இடத்தை பிடித்தது. கடந்த ஆண்டு பாரிஸ் ஒலிம்பிக்கில் தங்கம் வென்றதில் இருந்து முதலிடத்தில் இருந்த அமெரிக்கா 2ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டது.

மகளிர் ஐரோப்பிய உதைபந்தாட்ட சம்பியன்ஷிப்பில் மகுடம் சூடிய இங்கிலாந்து ஓர் இடம் முன்னேறி 4ஆவது இடம் வகிக்கிறது. பிரேசில் 4இல் இருந்து 7ஆவது இடத்துக்கு சறுக்கியது. சுவீடன் 3ஆவது இடத்திலும் ஜேர்மனி



5ஆவது இடத்திலும் உள்ளன.

இந்தியா 7 இடங்கள் முன்னேறி 63ஆவது இடத்தை பிடித்துள்ளது. தாய்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் வெற்றி பெற்று மகளிர் ஆசிய கிண்ணப் போட்டிக்கு தகுதி பெற்றதன் மூலம் இந்திய அணிக்கு இந்த ஏற்றம் கிடைத்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் அரசு...

பொன்னம்பலம் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த 3 ஆம் திகதி தமிழரசுக்கட்சியின் அரசியல் குழுக்கூட்டம் நிறைவடைந்த தன் பின்னர் அக்கட்சி உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்தில் காத்திருந்த தமது கட்சியினரை சந்திக்கவில்லை எனவும், அதுபற்றித் தமக்கு அறியத்தரவில்லை எனவும் கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டினார்.

அதன் நீட்சியாக கடந்த 7 ஆம் திகதி இருதரப்பினருக்கும் இடையில் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டிருந்த சந்திப்பு இறுதிநேரம் வரை உறுதிப்படுத்தப்படாததன் காரணமாக, அச்சந்திப்பும் நடைபெறவில்லை எனக் குறிப்பிட்ட கஜேந்திரகுமார், தமிழரசுக் கட்சி விரும்பும் பட்சத்தில் எதிர்வரும் வாரம் சந்திப்பொன்றை நடத்துவதற்குத் தாம் தயாராக இருப்பதாக அவர்களுக்கு அறியத் தந்திருப்பதாகவும் கூறினார். (அ)

## யாழில் இருவருக்கு...

மேற்கொள்ள வேண்டும் எனவும், யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையில், இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பல வருடங்களாக, மலேரியா அதிக பரம்பல் உள்ள நாடுகளுக்குச் சென்று நாடு திரும்பியோர் மத்தியில், மலேரியா நோய் இனங்காணப்பட்டுள்ளது.

இலங்கையில், 2021 இல் 26 பேரும், 2022 இல் 37 பேரும், 2023 இல் 62 பேரும், 2024 இல் 38 பேரும், 2025 இல் 29 பேரும் என நாடு திரும்பியோர் மலேரியா நோயுடன் இனங்காணப்பட்டுள்ளனர்.

அவ்வாறே, யாழ்ப்பாண மாவட்டத்திலும், 2021 இல் 2 பேரும், 2022 இல் 7 பேரும், 2023 இல் 6 பேரும், 2024 இல் 2 பேரும், 2025 இன் இதுவரையான காலப் பகுதியில் 5 பேரும் இனங்காணப்பட் டுள்ளனர்.

இந்த வாரம், யாழ்ப்பாண மாவட்டத்தில், கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் டோகா சென்று, கடந்த 30 ஆம் திகதி நாடு திரும்பிய 2 நோயாளர்கள் இடையே மலேரியா நோய் இனங்காணப்பட்டுள்ளது.

எனவே, எமது நாட்டில் மலேரியா நோயின் உள்ளூர் பரம்பல் முற்றாக ஒழிக்கப்பட்டாலும், மலேரியா நோயைப் பரப்புகின்ற நுளம்புகள் இன்னமும் காணப்படுகின்றன.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்களை தவிர்க்கும் நோக்குடன், மலேரியா பரம்பல் உள்ள நாடுகளுக்குச் செல்லும் பொது, மக்கள், யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் உள்ள, மலேரியா தடுப்பு பணிமனையுடன் தொடர்பு கொண்டு, மலேரியா தடுப்பு மருந்துகளை பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

அவர்கள், அந்த நாடுகளில் தங்கியுள்ள காலப்பகுதியில், இத்தடுப்பு மருந்துகளைப் பாவிப்பதன் மூலம், மலேரியா நோய் வராமல் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

மலேரியா பரம்பல் உள்ள நாடுகளுக்குச் சென்று வந்தவர்கள், நாடு திரும்பியவுடன், மலேரியாவுக்கான குருதிப் பரிசோதனையை எமது வைத்திய சாலைகளில் மேற்கொண்டு, உரிய சிகிச்சைகளை பெற்றுக் கொள்ளலாம்.

எனவே, மக்கள் அனைவரும், மலேரியா பரம்பல் அதிகமாகக் காணப்படும் ஆசிய, ஆபிரிக்க மற்றும் தென் அமெரிக்க கண்டங்களுக்குச் செல்லும் போது, பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கையாண்டு, எமது நாட்டில் மலேரியா நோய் பரவாதிருக்க ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

என யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். (அ - 03 - 05)

## கொக்குத்...

வயதுடைய இளைஞனே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொக்குத்தொடுவாய் கோட்டைக் கேணி பிள்ளையார் ஆலயத்திற்கு 300 மீற்றர் முன்பாக கொக்குத்தொடுவாய் களப்பு கடலில் நேற்று இரவு தொழிலுக்கு சென்ற இளைஞன் நேற்று அதிகாலை தொழில் முடித்து மோட்டார் சைக்கிளில் திரும்பிய போது இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த இளைஞனை துரத்தி வந்த இனந்தெரியாதோர் கொக்குத்தொடுவாய் களப்பு கடலில் இருந்து 50மீற்றர் தூரத்தில் வைத்து கூரிய ஆயுதத்தால் வெட்டிக்கொலை செய்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் நபர் ஒருவர் தொழிலுக்கு செல்லும் போது குறித்த இளைஞன் வீதியில் வீழ்ந்து கிடப்பதை அவதானித்துள்ளார்.

அப்பகுதியில் யானை நடமாட்டம் அதிகமாகையால், யானை அடித்து விட்டதோ என நினைத்து, குறித்த இளைஞனின் தந்தையும், கிராம அபிவிருத்தி சங்க தலைவரும் விரைந்து அவ்விடத்திற்கு சென்று பார்த்த போதே இளைஞனின் உடலில் வெட்டுக் காயங்கள் இருந்துள்ளது. பின்னர் கொக்குளாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை தொடர்ந்து தீவிர விசாரணையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

அத்தோடு சம்பவ இடத்திற்கு வருகை தந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் சடலத்தை பார்வையிட்டு மோப்பநாய் சகிதம் சோதனையை மேற்கொள்ளுமாறும், கைவிரல் அடையாளத்தை பரிசோதனை மேற்கொள்ளுமாறும், உடலத்தை உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கவும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மோப்ப நாய் சகிதம் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்தோடு குறித்த இளைஞனின் அத்தானை விசாரணைக்காக பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றுள்ளனர்.

குறித்த இளைஞன் யாரால் கொலை செய்யப்பட்டார், என்ன காரணத்திற்காக கொலை செய்யப்பட்டார் என பல்வேறு கோணத்தில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது.

குறித்த இளைஞன் சிறந்த மரதனோட்ட வீரனாவார். வடமாகாணத்தில் பல சாதனைகளை கடந்த காலங்களில் பெற்றிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## 16வயது...

உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசா ரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். கிருமித் தொற்று காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரிய வந்துள்ளது. (அ-05)

## யாழில்...

நேற்று முன் தினம் இரவு புத்தூர் கலைமதி விளை யாட்டு மைதானத்தில் நடைபெற்ற கரப்பந்தாட்டத்தை பார்த்துவிட்டு குறித்த இரண்டு இளைஞர்களும் மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்தனர்.

இதன்போது பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்திக்கு அருகாமையில் இருந்த மின்கம்பத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது இருவரையும் அச்சுவேலி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை குறித்த இளைஞன் அங்கேயே உயிரிழந்தார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

மற்றைய இளைஞர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (அ)

## பிரதமர் மோடி - ரணில்...

ஆம் ஆண்டில் தனியாள் வருமானம் 4,500 டொலர்களாக உயர்ந்ததுடன், மனிதவள அபிவிருத்தி சுட்டி சீரான வளர்ச்சி கண்டது. வறுமை 24 சதவீதமாகக் குறைந்தது.

2025 ஆம் ஆண்டில் ஆள்வீத வருமானம் 4,600 டொலர்களுக்கு மேலிருக்கும் எனவும் வறுமை 22.7 சதவீதமாகக் குறையும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. நுகர்வுச்சுட்டி மேலேறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

2025 ஆம் ஆண்டின் அண்மைக் காலத் தரவுகள் முதன்மையான பொருளாதார குறிகாட்டிகளில் நீடித்த முன்னேற்றத்தைக் காட்டுகின்றன. இது மக்களது வாழ்க்கை தரம் மேம்பட்டு வருவதனைச் சுட்டிக்காட்டுகிறது.

எனினும் இவ்வாண்டில் அமெரிக்கா முன்மொழிந்துள்ள வரி விதிப்பானது 44 சதவீதத்திலிருந்து இருந்து 20 சதவீதமாகக் குறைக்கப்பட்டாலும் இது ஆடை ஏற்றுமதியை கடுமையாகப் பாதிக்கும். இது இலங்கைப் பொருளாதரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் அண்ணளவாக 24 சதவீதமானவை ஐக்கிய அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

வினைத்திறன் உள்ள தொழிலாளர் மற்றும் மூளைசாலிகள் வெளியேற்றம், திறன் பொருத்தமின்மை, குறைந்த பணியாளர் பங்கேற்பு முதலியன உற்பத்தித்திறனைப் பாதிக்கும்.

எனவே இலங்கையானது, மரபு சார் ஏற்றுமதிகளில் தொடர்ந்து தங்கியிருக்காமல் ஏற்றுமதிகளை பல்வகைப்படுத்துவதோடு குறுகிய சந்தைகளைச் சார்ந்திருப்பதைக் குறைத்தலும் வேண்டும்.

மேலும் திறமையற்ற அரச தொழில் முயற்சியாண்மைகளை மறுசீரமைத்து வருவாய் தரக்கூடியவைகள் ஆக மாற்றுவதோடு அரச, தனியார் கூட்டுடமை முயற்சிகளை ஊக்குவித்தலும் வேண்டும்.

இறுதியாக சமகால உலக ஒழுங்கிற்கு ஏற்ப எண்ம மாற்றம், செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு மற்றும் பசுமை முதலீடுகளை அதிகரித்தல் முதலியனவும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கைப் பொருளாதாரம் இப்பொழுது மீட்புநிலை நோக்கி பயணிக்கிறது. எனினும் கொள்கைப் பின்வாங்கல், கடன் சுமை, வறுமை, வேலைவாய்ப்பு பற்றாக்குறை முதலியன இன்னும் தீரவில்லை. அடுத்த இரண்டு ஆண்டுகள் முதன்மையானவை ஆகும்.

நாடு முன்னேறும் பொழுது, பொருளாதார உறுதிப்பாட்டை சமூக சமத்துவத்தோடு சமநிலைப்படுத்துவதிலும், சீர்திருத்தத்திற்கான அரசியல் ஒருமித்த கருத்தைப் பேணுவதிலுமே இந்த மீட்சி நீண்ட காலத்திற்கு நிலையானதாக இருக்குமா என்பதனை முடிவு செய்யும்.

குறுகிய கால மீட்சியை நீண்ட கால மீட்சியாக மாற்றுவதற்கு உறுதியான சீர்திருத்தங்கள் மற்றும் அனைத்து பிராந்தியங்களையும் உள்ளடக்கிய கொள்கைகள் சர்வதேச ஆதரவோடு மேற்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கைப் பொருளாதார மீட்சியின் வெற்றி ஆனது நிதி ஒருங்கிணைப்பு, பணவியல் கொள்கையை சீர்செய்தல், பேரண்டப் பொருளாதார நிலையான தன்மையை பேணுதல் முதலியவற்றில் தங்கியுள்ளது.

வான், கடல், எரிசக்தி, வணிகம் மற்றும் மக்கள் தொடர்பு முதலிய ஆழமான இணைப்புக்கான முன்மொழிவுகள் ஏற்கனவே மேசையில் உள்ளன. 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், அன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பிரதமர் நரேந்திர மோடியும் ஒத்துழைப்புக்கான ஒரு கட்டமைப்பை கோடிட்டுக் காட்டினர்.

புதிய அரசாங்கம் கொள்கையளவில் அதனைச்செயற்படுத்த ஒப்புக்கொண்டாலும் இவ்விடயம் தொடர்பில் முன்னேற்றம் மெதுவாகவே உள்ளது.

இந்த முயற்சிகளை செயற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளுக்கு புதிய அரசாங்கம் முன்னுரிமை அளிக்க வேண்டும் - என்றார். (அ)

## கத்தோலிக்க...

பிரச்னையாகக் கருதப்படுகின்றது என யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். மறைமாவட்டத்தில் "புதிதாய் வாழ்வோம்" என்ற தலைப்பில் 2016ம் ஆண்டு நடைபெற்ற மேய்ப்புப்பணி மாநாட்டில் எடுக்கப்பட்ட மிகவும் முக்கியமான தீர்மானங்களில் ஒலிபெருக்கிப் பாவனை சம்பந்தமான விடயம் முக்கிமான இடத்தைப் பெற்றது. மாநாட்டின் தீர்மான இலக்கம் 4 கூறுவதாவது: ஆலய வழிபாடுகளின் போது பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கி சாதனங்களினால் ஆலய சுற்றாடலில் வாழும் மாணவர்கள். பாடசாலைகள், நோயாளர்கள், வயோதிபர் ஆகியோருக்கு ஏற்படும் இடையூறுகளைத் தவிர்க்க பின்வரும் ஒழுங்குகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். நாட் திருப்பலிகள், ஞாயிறு திருப்பலிகளின் போது ஆலயத்திற்கு உள்ளே மட்டும் கேட்கும் படியாகவும், திருநாட் காலங்களில் ஆலய வளாகத்துக்குட்பட்டதாகவும் ஒலிபெருக்கிகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

இம்மாநாட்டின் இத்தீர்மானத்தைத் தொடர்ந்து யாழ் மறைமாவட்டத்தில் பல ஆலயங்களில் இந் நடைமுறை மிகவும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இருப்பினும் சில ஆலயங்களில் இக்கட்டுப்பாடானது உதாசீனப் படுத்தப்பட்டமையால், இன்று இது ஓர் சமூகப் பிரச்சினையாக மாறிவிட்டது. பலர் இதுபற்றி தமது கடுமையான கண்டனங்களையும் அதிருப்தியையும் தெரிவித்துள்ளார்கள். யாழ். அரச அதிபர் கூட ஒலிபெருக்கிப் பயன்பாட்டில் கோவில்கள், ஆலயங்களில் கட்டுப் பாட்டினைப் பேணவேண்டும்-என்றார். (அ)

## சபாநாயகருக்கு...

பிரேரணையில் கையெழுத்திட்டு அதனை சபாநாயகரிடம் கையளிப்பதாகும்.

அடுத்தது பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச உரையாற்றும் போது ஆளுந்தரப்பினரால் இடையூறு ஏற்படுத்தப்படுவதோடு, சபாநாயகரால் முறையாக நேரம் வழங்கப்படாமை குறித்து முறைப்பாடளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய இதற்கு எதிராக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் இணைந்து பாராளுமன்ற குழுக்களுக்கிடையிலான ஒன்றியத்திடம் முறைப்பாடளிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம்.

எதிர்க்கட்சி தலைவருக்கு மாத்திரமின்றி, எதிர்க்கட்சியின் ஏனைய உறுப்பினர்களுக்கும் உரிய நேரம் வழங்கப்படாமை குறித்தும் முறைப்பாடளிக்கவுள்ளோம். இவை மாத்திரமின்றி புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதாக அரசாங்கம் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்ற தெரிவுக்குழுவை நியமிப்பதற்கு வலியுறுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கான கையெழுத்து பெறுதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு குறிப்பிட்ட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதற்குள் அவற்றை நிறைவு செய்து அடுத்த கட்ட நகர்வுகளை முன்னெடுப்போம். நம்பிக்கையில்லா பிரேரணையில் அடுத்த வாரத்துக்குள் கையெழுத்துக்களைப் பெற்று கையளிப்போம். ஏனைய நடவடிக்கைகளும் ஓரிரு வாரங்களுக்குள் நிறைவடையும். ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இதற்காக ஒருங்கிணைப்பிற்கான பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சைபர் தாக்குதல் நடத்தப்படும் அபாய நிலைமையில் இலங்கை!

**கெஸ்பர்ஸ்கி நிறுவனம் எச்சரிக்கை**

கொழும்பு, ஓக. 09

**இலங்கையில் சைபர் தாக்குதல் நடத்தப்படக்கூடிய அபாயம் தொடர்பில் எச்சரிக்கப்பட்டுள்ளது. உலகின் முதல் நிலை சைபர் பாதுகாப்பு நிறுவனமான கெஸ்பர்ஸ்கி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.**

ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் மிக மோசமான அச்சுறுத்தல் நிலவும் நாடுகளில் ஒன்றாக இலங்கை பெயரிடப்பட்டுள்ளது.

குறிப்பாக சைட்வைண்டர் என்ற சைபர் தாக்குதல் குழுவின் அச்சுறுத்தல் நிலவுகிறது. இதில் இலங்கை ஒரு முக்கிய இலக்குகளில் ஒன்றாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

அரச இரகசியங்கள் உள்ளிட்ட முக்கியமான தகவல்களை இலக்கு வைத்து இந்தக் குழுக்கள் சைபர் தாக்குதல் நடத்துகின்றன என்று கூறப்படுகிறது.

பங்களாதேஷ், கம்போடியா, வியட்நாம், சீனா, இந்தியா, மாலைதீவு, நேபாளம், மியன்மார், இந்தோனேசியா, மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகள் மீதும் சைபர் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

மின்னஞ்சல்கள் மூலம் சைபர் தாக்குதல்கள் நடத்தப்படுகிறது. இந்த சைபர் தாக்குதல்கள் தகவல்களை திரட்டும் நோக்கிலானது அல்ல எனவும் புவிசார் அரசியல் காரணிகளையும் அரச இரகசியங்களைக் கைப்பற்றும் நோக்கிலும் மேற்கொள்ளப்படுகிறது - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## டொலர் கையிருப்பில் அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 09

நாட்டின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பு கடந்த ஜூலை மாதத்தில் 614 கோடி டொலராக அதிகரித்துள்ளது.

இது, கடந்த ஜூன் மாதத்தில் 608 கோடி டொலராக இருந்தது. இந்த நிலையில் கடந்த மாதம் ஒரு சதவீதம் அதிகரித்துள்ளது.

இந்தக் கையிருப்பில் சீனாவின் நிதி பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட 140 கோடி டொலரும் அடங்கும். ஆனால், இது பயன்பாட்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டது - என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ஐ)

## வத்தளை கொலை தொடர்பில் மேலும் 4 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, ஓக. 09

ஒருவரை கூரிய ஆயுதத்தால் குத்திக் கொலை செய்த சம்பவம் தொடர்பில் மேலும் 4 சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு - வத்தளையில் கடந்த ஜூலை 19ஆம் திகதி மாடி வீட்டில் ஒருவர் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் பேலியகொடை பொலிஸார் நடத்திய விசாரணைகளில் கொலைக்கு பயன்படுத்தப்பட்ட 4 வாள்கள் கைப்பற்றப்பட்டன.

இதைத் தொடர்ந்தே 4 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தில் கொலை செய்யப்பட்டவர் 2023ஆம் ஆண்டு மஹாபாகே பகுதியில் நடந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துக்கு உடந்தையாக இருந்தவர் என்றும் பாதாள உலகக் குழுவை சேர்ந்தவர் எனவும் தெரிய வந்துள்ளது. (ஐ)

## விபத்தில் முதியவர் பலி!

கொழும்பு, ஓக. 09

வானும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று காலை 6 மணியளவில் களுத்துறை - ஹொரணை மருத்துவமனைக்கு அண்மையாக இடம்பெற்ற இந்த விபத்தில் 75 வயது முதியவரே உயிரிழந்தார்.

முதியவர் தனது மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் விகாரைக்கு சென்று கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் கணவன் உயிரிழந்த நிலையில் மனைவி படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வானின் சாரதியை ஹொரணை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

## இடைநிலை வகுப்புகளுக்கு மாணவர் சேர்க்கை விரைவில்

கொழும்பு, ஓக. 09

பாடசாலைகளில் இடைநிலை வகுப்புகளுக்கு மாணவர் சேர்க்கை விரைவில் நடைபெறவுள்ளது.

பாடசாலைகளில் இடைநிலை வகுப்புகளுக்கு மாணவர் சேர்க்கை யை மறுஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு அதன் பரிந்துரைகளை கல்வி ஆலோசனைக் குழுவிடம் சமர்ப்பித்துள்ளது.

இந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் திருத்தப்பட்ட சுற்றறிக்கை வெளியிடப்படும் என்று கல்வி பிரதி அமைச்சர் கலாநிதி மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார். (ஐ)

# ஒழுக்கமான பிள்ளைகள், தொழில் கல்வி கல்வி சீர்திருத்தத்தின் நோக்கம் இவையே

**பிரதமர் ஹரிணி அமரசூரிய**

கொழும்பு, ஓக. 09

பிள்ளைகளிடம் விழுமியங்களை வளர்ப்பதும் பாடசாலை கல்வியை இடையில் நிறுத்திய பிள்ளைகளை தொழில் கல்விக்கு வழிநடத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அவர்களின் பங்களிப்பை உறுதி செய்வதும் கல்வி சீர்திருத்தங்களின் முக்கிய நோக்கமாகும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

2026ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கல்வி சீர்திருத்தங்கள் குறித்து விளக்கமளிக்கும் விசேட கலந்துரையாடல் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தலைமையிலான ஆயர்களுடன் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "எல்லா பிள்ளைகளுக்கும் உயர்தரமாக கருதப்படும் வேலைகளில் ஈடுபட வாய்ப்பு கிடைப்பதில்லை. கடற்றொழில், மின் பொறியியல் துறை மற்றும் வாகன பழுதுபார்ப்பு போன்ற தொழிற்கல்வித் துறைகளின் பெறுமதியை விளக்கி, அத்துறைகளில் நிபுணர்களை உருவாக்குவதற்கான அடித்தளத்தை பாடசாலைக்குள்ளேயே எவ்வாறு உருவாக்குவது என்பது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.

ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதில் பாடத்துறை நிபுணர்களைத் தேர்ந்தெடுப்பதன் முக்கியத்துவம், அந்த தேர்வு செயல்முறையை முறைப்படுத்துதல் மற்றும் பிள்ளைகளுக்கு சிறந்த தரமான கல்வியை வழங்க எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. (ஐ)

## தரமற்ற தடுப்பூசி விநியோகம் சந்தேகநபருக்கு பிணை மறுப்பு

கொழும்பு, ஓக. 09

இலங்கை முழுவதும் உள்ள மருத்துவமனைகளுக்குத் தரமற்ற தடுப்பூசிகளை விநியோகித்தார் என்று கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மருத்துவ நிறுவனம் ஒன்றின் உரிமையாளர் சுதத் ஜனக பெர்னாண்டோ தாக்கல் செய்த பிணை மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி இந்திரிகா கலிங்கவன்ச இந்த மனுவை நிராகரித்துள்ளார்.

இந்த வழக்கு ஏற்கனவே மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவர் அடங்கிய அமர்வில் விசாரிக்கப்படுவதால் பிணை மனுவை தனது நீதிமன்றத்தால் பரிசீலிக்க முடியாது என்று அவர் அறிவித்தார்.

தடுப்பூசி விநியோக ஊழலில் முதன்மை குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டுள்ள சந்தேக நபர் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பல்வேறு குற்றங்கள் 5,307 பேர் கைதாகினர்

கொழும்பு, ஓக. 09

நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட விசேட நடவடிக்கைகளில் 5 ஆயிரத்து 307 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ், விசேட அதிரடி படை, இராணுவம், கடற்படை இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை முன்னெடுத்தன.

இதன்போது, பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட 20 பேர் ஆதாரங்களுடன் கைது செய்யப்பட்டனர். அத்துடன், சந்தேகத்தின் அடிப்படையில் 676 பேரும் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 216 பேரும் திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 459 பேரும் மதுபோதையில் வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 86 பேரும் கவனக்குறைவாக வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 22 பேரும் ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3 ஆயிரத்து 828 பேரும் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# புலிகளின் கொலை பட்டியலில் மகிந்த பெயர் இருக்கவில்லை!

**சரத் பொன்சேகா தெரிவிப்பு**

கொழும்பு, ஓக. 09

விடுதலைப் புலிகளின் கொலைப்பட்டியலில்கூட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பெயர் இருக்கவில்லை. அவருக்கு தற்போது வழங்கப்பட்டிருக்கும் 60 பேர் கொண்ட பாதுகாப்பு மிக அதிகம். அவரின் பாதுகாப்பு அணியை 30 பேராகக் குறைக்க வேண்டும் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மகிந்தவுக்கு பாதுகாப்புக் குறைக்கப்பட்டுள்ளதாக சிறீலங்கா பொதுஜன பெரமுனவினர் கூறுகின்றனர். ஆனால், அவருக் தற்போது வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புக்கூட மிகவும் அதிகம் என்றே நான் கூறுவேன்.

"பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கத் தலைமைத்துவம் வழங்கினார் என்பதற்காக மகிந்த மீது புலிகள் ஒருபோதும் தாக்குதல் நடத்தவில்லை. தாக்குதல் நடத்துவதற்கு முயற்சியும் எடுக்கவில்லை. புலிகளின் கொலைப் பட்டியலில்கூட மகிந்தவின் பெயர் இருக்கவில்லை.

"புலிகள் என்மீதே தாக்குதல் நடத்தினார்கள். போர் தொடங்கும் முன்பே என்மீது தாக்குதல் நடத்தினர். மகிந்த வைத்திருந்த பாதுகாப்பு பிரிவில் அரைவாசி பேர் மனைவி கடைக்குச் செல்லும்போது பாதுகாப்பு வழங்குவதற்கும், பிள்ளைகள் விளையாடுவதற்கு பாதுகாப்பு வழங்குவதற்குமே பயன்படுத்தப்பட்டனர்.

"இது வெறும் பகட்டு. பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லாமல் எதற்கு மகிந்தவுக்கு இத்தனை பாதுகாப்பு. நன்கு பயிற்சி வழங்கப்பட்ட 30 பேர் மகிந்தவின் பாதுகாப்புக்கு போதும். நான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தால், 30 பேரைத்தான் பாதுகாப்புக்கு வழங்குவேன். சிங்கப்பூர் போன்ற நாடுகளில் அமைச்சர்களுக்கு பாதுகாப்பில்லை. அவர்கள் மக்களோடு மக்களாக திரிகிறார்கள். அப்படியொரு நிலைமை எமது நாட்டிலும் வர வேண்டும்", என்றார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org